# கிறிஸ்தவம்

# தரம்

# 4

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2018

இரண்டாம் பதிப்பு- 2019

மூன்றாம் பதிப்பு - 2020

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0052-7

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக,
இல. 90, வசனவத்தா, மத்தேகோடா
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

Published by : Educational Publications Department
Printed by : Vishwa Graphics (Pvt) Ltd.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.

# முன்னுரை

பூகோளக் கிராமத்திற்கு நாளந்தம் சேர்க்கப்படும் வளமான புதிய அறிவு நமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படுவது அவசியமானதாகும். அத்தோடு நமது நற்பண்புகளையும் அதனுடன் ஒன்றிணைக்க நாம் மறந்துவிடக்கூடாது. இந்நேர் மனப்பாங்குகளைப் பாதுகாப்பதுடன் மேலும் சிறந்த ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கும் மகத்தான பணிக்கு அவசியமான தரமான கற்றல் சாதனங்களை வழங்குவது எமது திணைக்களத்தின் பிரதான நோக்கம் என்பதை வலியுறுத்துகின்றேன்.

பாடவிடயத்திற்கு மேலதிகமாக பல உருக்களையும் மற்றும் சொற்களையும் கொண்டு ஆக்கப்பட்டுள்ள இப்பாடநூல்கள் எதிர்கால உலகத்திற்குச் செல்லும் பாதையின் ஒளிவிளக்குகள் போன்றனவாகும். நீங்கள் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும்போது மகிழ்ச்சியுடன் நினைவுகூரக்கூடிய இனிமையான பல நினைவுகளை இப்பாடநூல்களின் பக்கங்கள் கொண்டிருக்கும் என்பது உறுதியாகும்.

ஆசிரியர்களிடம் இருந்து அறிவைப் பெற்றுள்ள உங்களுக்கு அறிவும் இரசனையும் நிறைந்த சிறந்த பரிசுப் பொருளான இப்பாடநூல்களின் சிறந்த பலன்களை அடைவதற்கான அறிவைத் தேடும் பயணத்தில் வீரநடை போடுவது அவசியமாகும். அரசாங்கம் பாடநூல்களுக்காகச் செலவிடுகின்ற பெருந்தொகைப் பணத்திற்கு விலைமதிப்பற்றதொரு பெறுமதியை மாணவர்களாகிய உங்களால் மட்டுமே வழங்க முடியும். வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக முகங்கொடுத்து நாளைய உலகை மலரச்செய்வதற்கு நாட்டின் சிறார்களான உங்களுக்கு இயலவேண்டுமென அன்புடன் பிரார்த்திக்கின்றேன்.

இப்பாடநூலாக்கத்திற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு அங்கத்தவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல
2020.06.26

**கண்காணிப்பும் மேற்பார்வையும்** : **பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்** : **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்** : **ஆர். டீ. விஜேவிக்ரம**
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

: **எஸ். ஜீ. டீ. என். எல். சமரக்கோன்**
உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

: **அ. ஞானேஸ்வரன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**பதிப்பாசிரியர் குழு** : **அருட்பணி. சி. டபிள்யூ. சி. பால்ராஜ்**
அதிபர்
பரி. தோமஸ் கல்லூரி, பண்டாரவளை.

: **அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது**
செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்
தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு.

: **கே. ஆர். சேபாளிகா**
ஆசிரியர்
கிறிஸ்துராஜா தேசிய பாடசாலை
துடெல்ல, ஜாஎல.

**எழுத்தாளர் குழு** : **டி. குளோரி எப்சிபா**
ஆசிரியர்
கம்பளை இந்துக் கல்லூரி, கம்பளை.

: **எம். பி. எஸ். பெரேரா**
ஆசிரிய ஆலோசகர் கிறிஸ்தவம்
(ஓய்வு நிலை.)

: **எஸ். பீ. சீ. பிரனாந்து**
ஆசிரியர்
வெஸ்லி கல்லூரி
கொழும்பு.

: **ஏ. கிதுமினி சல்காது**
ஆசிரியர்
மேம / நீர் / கட்டுநாயக்க மகா வித்தியாலயம்
கட்டுநாயக்க.

: **மல்மி ரஷ்மிதா பீரிஸ்**
ஆசிரியர்
வேல்ஸ் குமரி வித்தியாலயம்,
மொரட்டுவ.

**மொழிப் பதிப்பாசிரியர்** : **ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை.

**சித்திரம், அட்டை வடிவமைப்பு** : **டபிள்யூ. பீ. சுசில் ஜயசாந்த**

**சரவை பார்ப்பு** : **எஸ். வடிவேல்**
ஆசிரியர்
பரி. ஜோன்ஸ் வித்தியாலயம்
தெமட்டகொட.


**கணினி வடிவமைப்பு** : **நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் படைத்த அழகிய ஏதேன் தோட்டம் | 1 |
| 2. | கடவுள் படைப்பில் பெறுமதிமிக்க வளங்கள் | 4 |
| 3. | கடவுள் படைப்பின் மகிமை | 7 |
| 4. | கடவுள் வாக்குறுதியின் மகிமை | 10 |
| 5. | கடவுளின் பாதுகாப்பை உணர்வோம் | 14 |
| 6. | கடவுள் எலியாவுக்கு உணவு வழங்குதல் | 17 |
| 7. | கடவுளின் பிரசன்னத்தைக் கண்ட பேதுரு | 20 |
| 8. | இரு சகோதரிகளுக்கு ஆறுதல் | 23 |
| 9. | கடவுளைத் துதிப்போம் கடவுளை வணங்குவோம் | 27 |
| 10. | பன்னிரு திருத்தூதர்கள் | 30 |
| 11. | பெண் சீடர்கள் | 34 |
| 12. | இறைவார்த்தைகளைக் கேட்போம் | 37 |
| 13. | நாம் எல்லோரும் நண்பர்கள் - எனக்கு பகைவர் இல்லை | 40 |
| 14. | பேதுருவின் மாமி குணமடைதல் | 44 |
| 15. | முடக்குவாதமுற்றவர் குணமடைதல் | 48 |
| 16. | தூய ஆவியின் கனி | 52 |
| 17. | சுகம் பெற்ற தொழுநோயாளி | 56 |
| 18. | நல்ல ஆயர் இயேசு | 58 |
| 19. | இயேசுவும் சக்கேயுவும் | 64 |
| 20. | கடவுளுக்குக் கீழ்ப்படிந்த சாமுவேல் | 68 |
| 21. | இளவயதில் அரசனான யோசியா | 73 |
| 22. | இறைவிருப்பத்திற்குக் கீழ்ப்படிந்த மரியா | 76 |
| 23. | ஆபிரகாம் | 79 |
| 24. | பவுலும் ஒனேசிமுவும் | 83 |
| 25. | எஸ்தர் | 88 |

# 1 கடவுள் படைத்த அழகிய ஏதேன் தோட்டம்

**தொடக்க நூல் 2:8-9**



உரு 1.1 ஏதேன் தோட்டம்

**அண்ணா** : ஏதேன் தோட்டத்தைப் பற்றி நீ அறிந்திருக்கின்றாயா?

**தங்கை** : ஏதேன் தோட்டம் என்பது கடவுள் படைத்த முதல் மனிதர் வாழ்ந்த தோட்டம் அண்ணா.

**அண்ணா** : ஆம்! கடவுள் தோட்டத்தைப் படைத்தார் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அவர் ஏதேன் எனப் பெயரிட்டார். அங்கு அவர் படைத்த ஆதாம், ஏவாளைக் குடியிருக்கச் செய்தார்.

**தங்கை** : ஏதேன் தோட்டம் அழகானதா? அண்ணா

**அண்ணா** : ஆம். அது அழகானது. கனி தரும் எல்லா மரங்களும் இருந்தன.

**தங்கை** : அப்படியானால் அங்கு றம்புட்டான், மாம்பழம், அன்னாசி போன்ற பல வகையான பழங்கள் இருந்திருக்கலாம். மனிதர் பழங்களை சாப்பிட்டு மகிழ்ந்திருப்பார்கள் அல்லவா?

**அண்ணா** : ஆம் பழமரங்கள் மட்டுமல்ல. கடவுள் தோட்டத்தின் மத்தியில் இரு சிறப்பான மரங்களையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்.

**தங்கை** : அவை என்ன அண்ணா?

**அண்ணா** : ஒன்று வாழ்வின் மரம் மற்றது நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்.

**தங்கை** : எனக்கும் ஏதேன் தோட்டத்தில் நடக்கக் கிடைத்திருந்தால்...!

**அண்ணா** : ஆமாம்! கடவுள் மனிதரில் காட்டிய அன்பை அழகிய ஏதேன் தோட்டத்திலிருந்து அறிந்துகொள்ள முடியும்.

**கடவுள் படைத்த அழகிய ஏதேன் தோட்டத்துக்காக நன்றி!**



**மனன வாக்கியம்**

***“ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்”.***

**தொடக்க நூல் 2:8**



## செயற்பாடு

சுருக்கமான விடை எழுதுக.

1. கடவுள் படைத்த தோட்டத்தின் பெயர் என்ன?

2. அங்கு காணப்பட்ட சிறப்பான இரு மரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. கடவுள் படைத்த உலகில் நாம் சுவைத்து உண்ணும் ஐந்து சுவையான பழங்களைப் பெயரிடுக.

4. இறைவனின் படைப்பைப் பாதுகாக்க உம்மால் செய்யக்கூடிய செயல்கள் இரண்டு தருக.

# 2 கடவுள் படைப்பில் பெறுமதிமிக்க வளங்கள்

**தொடக்க நூல் 2: 10-15**

கடவுள் படைத்த ஏதேன் தோட்டத்திற்குள் அழகிய ஆறு ஒன்று ஓடியது. அது நான்கு சிறப்புமிகு ஆறுகளாகப் பிரிந்து சென்றது. அவைகள் பீசோன், கீகோன், திக்ரீசு, யூப்பிரத்திசு என்பனவாகும்.



உரு 2.1 ஏதேன் தோட்டத்தில் நான்கு ஆறுகள்

பீசோன் ஆற்றைச் சூழவுள்ள பிரதேசங்களில் பசும்பொன் காணப்பட்டது. கடவுள் ஏதேன் தோட்டத்தில் மனிதனுக்கு தேவையான அனைத்தையும் வழங்கி குடியேற்றினார். அதுமட்டுமல்ல அனைத்து வளங்களையும் பெற வழிகாட்டினார்.

பொன் மட்டுமல்ல  நறுமணப் பொருள்களும் இரத்தினக்கற்களும் நிலத்தில் புதைந்து காணப்பட்டன. நறுமணப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டன.

பலர் பொன், இரத்தினங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆபரணங்களை அணிய விரும்புகின்றனர். இரத்தினக்கற்கள் நிலத்திலிருந்து பெறப்படும் மிகப் பெறுமதிமிக்க வளம் ஆகும். ஆபரணங்கள் தயாரிப்பில் பலவிதமான இரத்தினக்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை இரத்தினக் கற்களுக்குப் பிரபல்யம் நிறைந்த நாடாகும்.



உரு 2.2 இரத்தினக்கல் ஆபரணங்கள்

கடவுள்  ஏதேன் தோட்டத்தில் மானிடருக்கு உணவு, பானம், பழங்கள், வாவி, அருவி, ஆறு போன்று பொன், நறுமணப் பொருள்கள், மாணிக்கக் கற்கள் போன்ற பெறுமதிமிகு வளங்களையும் வழங்கியது புதுமையானது.

**எமக்கு வாவி, ஆறு, நிலம் ஆகிய வளங்களை வழங்கிய கடவுளுக்கு மகிமை உண்டாவதாக!**



**விண்ணப்பம்**

***எமக்கு பெறுமதிமிக்க வளங்களை வழங்கியமைக்காக உமக்கு நன்றி ஆண்டவரே!***

***ஆமென்.***



## செயற்பாடு

சுருக்கமான விடை எழுதுக.

1. ஏதேனில் ஓடிய ஆறுகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. இலங்கை மண்ணில் இறைவன் எமக்கு வழங்கிய இயற்கை வளங்கள் நான்கினைப் பெயரிடுக.

3. கடவுளின் படைப்புகளான பொன், இரத்தினக்கற்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் ஆபரணங்கள் நான்கினைப் பெயரிட்டு பொருத்தமான படங்களை ஒட்டுக.

# 3 கடவுள் படைப்பின் மகிமை

கடவுள் உலகத்தைப் படைத்து அதில் ஏதேன் தோட்டத்தையும் கனிதரும் மரங்கள், வாவி, அருவி, ஆறுகள் நிலத்தின் வளமிகு வளங்கள் என்பனவற்றை வழங்கிய முறைகளைக் கடந்த பாடத்தில் கற்றோம்.

கடவுள் படைத்த காற்று, மழை, காலநிலைக் கோலத்தின் புதுமைகளை இப்பாடத்தில் அவதானிப்போம். எமது நாட்டுக்குப் பருவப்பெயர்ச்சி காற்றால் மழை பெய்கின்றது. பருவப்பெயர்ச்சிக் காற்றானது இருமுறை வீசுகின்றது. மழைபெய்யும் காலநிலைக்கு ஏற்ப எமது நாட்டில் நெற் பயிர்ச்செய்கையும் இருமுறை இடம்பெறும். அது பெரும்போகம், சிறுபோகம் எனப்படும். இக்காலங்களில் கிடைக்கும் மழையால் நெல் விதைக்கப்படும். அவ்வாறு விதைக்கப்பட்டு வளரும் பயிர்களில் அறுவடையானது பொருத்தமான காலத்தில் நடைபெறும்.



உரு 3.1 நெற்பயிர்ச் செய்கை

கடவுள் பொருத்தமான காலத்தில் வழங்கும் மழை, காற்று, சூரியஒளி போன்றவற்றால் மனிதன் நெல் பயிரிட்டு, அறுவடை செய்து உணவைப் பெற்றுக் கொள்கின்றான்.

***தங்கம் போல ஒளி வீசிடும்***
***நெற்கதிர் கண்டே***
***குனிந்து வெட்டி***
***எழுந்து நின்று***
***மகிழ் கொண்டாடுவோமே!***

***அறுவடையைப் பெருக்கித் தந்த***
***எம் இறைவனுக்கே***
***இருகரம் கூப்பி நாமும்***
***நன்றி கூறுவோமே!***



உரு 3.2 ஓசோன் படலம்

கடவுள் நாம் வாழும் புவிக் கோளத்துக்கு மேலாக வளிக் கோளத்தைப் படைத்தார். புவியில் விழும் அதிக சூரிய ஒளியை மறைப்பதற்கு ஓசோன் படலம் காணப்படுகின்றது. சூரிய ஒளிக் கதிர்களுடன் புவியில் விழும் பாதகமான கதிர்களிலிருந்து ஓசோன் படலம் புவியைக் காப்பாற்றுகின்றது. தற்போது ஓசோன் படலத்தில் துளை காணப்படுதல் கவலையான விடயமாகும்.

எமக்குக் கடவுள் வழங்கிய ஓசோன் படலமானது மனிதரின் செயற்பாட்டால் அழிக்கப்பட்டு வருகின்றது.

## ஓசோன் படலத்தின் அழிவால் ஏற்படும் தீய விளைவுகள்

- மனிதருக்குப் பல நோய்கள் ஏற்படல். (உதாரணம் - தோல் நோய், கண் பார்வைக் குறைவு)
- தாவர விருத்தி குறைவுபடுவதால் காடுகள் அழிதல்.

- கடல் தாவரங்களும் உயிரினங்களும் குறைவடைதல்.
- வளிக்கோளம் வெப்பமடைதல்.
- காலநிலை மாற்றம் உருவாகுதல்.

ஓசோன் படலத்தை அழியாது பாதுகாத்தல் எமது பொறுப்பாகும்.

**பயிரைச் செழிப்பாக்க பெரும்போக, சிறுபோகங்களைத் தந்த ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்!**



**மனன வாக்கியம்**

***"மண்ணுலகைப் பேணி அதன் நீர் வளத்தையும் நில வளத்தையும் பெருக்கினீர்! கடவுளின் ஆறு கரை புரண்டோடியது. அது தானியங்களை நிரம்ப விளையச் செய்தது."***

**திருப்பாடல்கள் 65:9**



## செயற்பாடு

1. எமது நாட்டில் நெற்பயிர்ச்செய்கை இடம்பெறும் இரு போகங்கள் யாவை?
2. ஓசோன் படலம் அழிவதால் ஏற்படும் தீய விளைவுகள் மூன்றைக் குறிப்பிடுக.
3. ஓசோன் படலத்தைப் பாதுகாக்க நீர் செய்யக்கூடியவைகள் இரண்டு குறிப்பிடுக.

# 4 கடவுள் வாக்குறுதியின் மகிமை

**தொடக்க நூல் 9:16**



உரு 4.1 வானவில்

**நிர்மலன்** : நிர்மலா... நிர்மலா... அதோ பார்! அழகான வானவில்.

**நிர்மலா** : ஆமாம்! அழகிய வானவில்.

**நிர்மலன்** : நிர்மலா! வானவில்லில் பல வர்ணங்கள் உள்ளன அல்லவா?

**நிர்மலா** : ஆம் நிர்மலன். சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா இந்த அழகிய ஏழு நிறங்களும் வானவில்லில் இருக்கின்றன.

**நிர்மலன்** : வானவில் என்பது கடவுளின் வாக்குறுதியின் அடையாளம் என அம்மா எனக்குக் கூறினார்.

**நிர்மலா** : கடவுள் வாக்குறுதியின் அடையாளம் என்றால் என்ன?

**நிர்மலன்** : இதோ! நான் உனக்குக் கூறுகின்றேன். நாம் மூன்றாம் வகுப்பில் நேர்மையாளர் நோவாவைக் குறித்துக் கற்றது நினைவிருக்கின்றதா?

**நிர்மலா** : ஆம்... ஆம்... கடவுள் நோவாவிடம் பேழை ஒன்றைக் கட்டுமாறு கூறினார். நோவா கடவுளுக்குக் கீழ்ப்படிந்து பேழையைச் செய்தார். பேழை கட்டிய பின் ஏழாவது நாள் மழை பெய்யத் தொடங்கியது. 40 நாட்கள் தொடர்ந்து பெய்த மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நோவாவும் அவரது குடும்பத்தவரும் பேழையில் இருந்த மிருகங்களும் காப்பாற்றப்பட்டனர்.

**நிர்மலன்** : நீ சரியாகச் சொன்னாய். அதன் பின்னர் ஆண்டவர் புவியில் வாழும் மக்களுக்கும் மிருகங்களுக்கும் வாக்குறுதி அளித்தார்.

**நிர்மலா** : கடவுள் எம்முடன் ஏற்படுத்திய வாக்குறுதி என்ன? நிர்மலன்!

**நிர்மலன்** : மண்ணுலகையும் உயிரினங்களையும் இனி வெள்ளப் பெருக்கால் அழிக்க மாட்டேன் என்பதற்கு அவர் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளம் 'வானவில்'.

**நிர்மலா** : மண்சரிவு, வெள்ளம், சுனாமிப் பேரலை போன்ற இயற்கை அனர்த்தங்கள் மனிதரை அழிப்பது ஏன்?

**நிர்மலன்** : மானிடர் அழிவதை கடவுள் விரும்பவில்லை. கடவுள் மானிடரை நேசிக்கின்றார். மனிதன் இயற்கை வளங்களை பாதுகாக்காமல் இருப்பதனால் அனர்த்தங்களும் அழிவுகளும் ஏற்படுகின்றன.

**நிர்மலா** : கடவுள் எம்மை அதிகமாக நேசிக்கின்றார் அல்லவா?

**நிர்மலன்** : ஆம் நிர்மலன். கடவுள் எம்மை அதிகமாக நேசிக்கின்றார். அதே போன்று எம்மை எப்போதும் பாதுகாத்து வருகின்றார்.

**நிர்மலா** : எல்லாவற்றையும் விபரமாக எனக்குக் கூறியபடியால் மிக்க நன்றி நிர்மலன். நாம் கடவுளை நேசிப்போம்.

**சிறுவர்களாகிய நாம்,**
**கடவுள் அருளிய வாக்குறுதிகளை விசுவாசித்து**
**வாழப் பழகுவோம்!**



**விண்ணப்பம்**

***அன்பான ஆண்டவரே,***


***நீர் எங்களுக்கு தந்தருளிய பாதுகாப்பின் வாக்குறுதிக்கும் நீர் எங்களை நேசித்து வருவதற்கும் நன்றி.***

***ஆமென்.***

## செயற்பாடு



1. காட்போட் அட்டையில் கீழேயுள்ள உருவை பிரதி செய்யுங்கள்.




- வானவில்லில் உள்ள நிறங்களுக்குப் பொருத்தமான 7 வர்ணக் கடதாசிகளை ஒட்டி அலங்கரியுங்கள்.

- நீர் அலங்கரித்த வானவில்லை ரிபனால் இணைத்து வீட்டில் தொங்கவிடுங்கள்.

2. இறைவனின் பாதுகாப்பை வேண்டி செபம் ஒன்று எழுதுக.

# 5 கடவுளின் பாதுகாப்பை உணர்வோம்

## விடுதலைப் பயணம் 13: 21 - 22

இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் பல ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தனர். அவர்கள் எகிப்தில் வாழ்ந்த காலத்தில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தனர். அவர்கள் ஆண்டவரிடம் வேண்டினர். ஆண்டவர் அவற்றைக் கேட்டார். இஸ்ரயேல் மக்களை விடுவிக்கும் பணியில் தலைமை தாங்கி வழிநடத்த ஆண்டவர் மோசேயைத் தேர்ந்தெடுத்தார். அவர் இஸ்ரயேல் மக்களை எகிப்து நாட்டிலிருந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்கு அழைத்துச் சென்றார்.

அவர்களின் பயணத்தில் பல சிறப்பான நிகழ்வுகள் இடம்பெற்றன. இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்தனர். அங்கு ஆண்டவர் அவர்களை வழிகாட்டிய இரு முறைகள் வேதாகமத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1. மேகத் தூண்



உரு 5.1 பகற் காலத்தில் மக்களுக்கு வழிகாட்டிய மேகத் தூண்

கடவுள் பகலில் மேகத் தூண் மூலமாக இஸ்ரயேல் மக்கள் பயணம் செய்ய வழிகாட்டினார்.

## 2. நெருப்புத் தூண்



உரு 5.2 இரவில் மக்களுக்கு வழிகாட்டிய நெருப்புத் தூண்

கடவுள் இஸ்ரயேல் மக்கள் இரவில் பயணம் செய்ய நெருப்புத் தூண் மூலமாக வழிகாட்டினார்.

இஸ்ரயேல் மக்களுக்கு முன்பாக மேகத் தூணும் நெருப்புத் தூணும் முன்சென்று வழிகாட்டின. வாக்குப்பண்ணப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தில் இறையன்பு, இறை பாதுகாப்பு, இறை வழிகாட்டல் என்பனவற்றை இஸ்ரயேல் மக்கள் அனுபவத்தில் கண்டனர்.

**சிறுவர்களாகிய நாம் இறையன்பையும் இறை பாதுகாப்பையும் அனுபவத்தில் காண முயல்வோம்!**

### மனன வாக்கியம்

*“பகலில் மேகத் தூணும் இரவில் நெருப்புத் தூணும் மக்களை விட்டு அகலவேயில்லை”.*

*விடுதலைப் பயணம்* **13:22**

## செயற்பாடு

(1) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை பூரணப்படுத்துங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மோ | | | 2 இ | | | 3 மே |
| | | | | | | |
| | | | ய | | | த் |
| | | | | | | |
| 4 நெ | | | பு | | | ண் |

**மேலிருந்து கீழ்**

1. வாக்குப்பண்ணப்பட்ட நாட்டின் பயணத்தில் தலைமைத்துவம் வகித்தவர்.
2. இஸ்ரயேல் மக்களிடம் கடவுள் காட்டியது.
3. இஸ்ரயேல் மக்களுக்கு பகலில் வழிகாட்டியது

**இடமிருந்து வலம்**

4. இஸ்ரயேல் மக்களுக்கு இரவில் வழிகாட்டியது.

(2) சிறுபிள்ளையாகிய உமக்கு இறைவனின் பாதுகாப்புக் கிடைக்கும் முறைகள் இரண்டை எழுதுக.

# 6 கடவுள் எலியாவுக்கு உணவு வழங்குதல்

## 1. அரசர் 17:1-7

இஸ்ரயேல் நாட்டில் பல்வேறு காலகட்டங்களில் பலவிதமான அரசர்கள் ஆட்சி செய்தனர் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுள் ஆகாபு அரசன் கடவுளுக்கு முன்னால் தீய செயல்களைச் செய்து வந்தான். ஆகாபின் ஆட்சிக்காலத்தில் இஸ்ரயேல் நாட்டின் இறைவாக்கினராக எலியா இருந்து வந்தார்.

வரும் ஆண்டுகளில் வரவிருக்கும் வரட்சி குறித்து எலியாவுக்கு கடவுளின் செய்தி அறிவிக்கப்பட்டது. அதனை எலியா ஆகாபு அரசனுக்கு அறிவித்தார்.

பின்னர் ஆண்டவரின் வாக்கு எலியாவுக்கு வந்தது. ''இங்கிருந்து ஓடிவிடு. கிழக்கு முகமாகப் போய் யோர்தானுக்கு அப்பாலுள்ள கெரீத்து ஓடையருகில் ஒளிந்துகொள். ஓடையில் தண்ணீர் குடித்துக்கொள். அங்கே உனக்கு உணவளிக்குமாறு காகங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்'' என்றார்.



உரு 6.1 காகங்கள் எலியாவுக்கு உணவளித்தல்

எலியா ஆண்டவரின் வாக்குக்குக் கீழ்ப்படிந்து கொரீத்து ஓடையருகில் தங்கியிருந்தார். காகங்கள் காலையிலும் மாலையிலும் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்தன. அவர் கொரீத்து ஓடையில் தண்ணீர் குடித்தார்.

கடவுள் எலியாவை மிக நேசித்தார். அவர் காகங்கள் மூலமாக எலியாவுக்கு உணவளித்தார். அந்த வேளையில் எலியாவுக்கு கடவுளின் பாதுகாப்புக் கிடைத்தது.

**நீங்களும்**

- எலியாவைப் போன்று கடவுளை நேசியுங்கள்.
- எலியாவைப் போன்று கடவுளின் மூலமாகப் போசணை பெறுங்கள்.
- எலியாவைப் போன்று வாழ்வில் கடவுளின் செயற்பாட்டையும் கடவுளின் பாதுகாப்பையும் அனுபவத்தில் காணுங்கள்.

**நான் கடவுளை நேசிக்கின்றேன்; கடவுளின் போசணையைப் பெறுகின்றேன்!**



**மனன வாக்கியம்**

*“உனக்கு உணவளிக்குமாறு காகங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறேன்.*

**1 அரசர் 17:4**

## செயற்பாடு



1. பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடவுளின் முன்னால் தீயவைகளை செய்த அரசன் யார்?

2. ஆண்டவரின் வாக்குக்குக் கீழ்ப்படிந்த இறைவாக்கினர் யார்?

3. எலியா எங்கே ஒளிந்திருந்தார்?

4. எலியாவுக்கு உணவு கொண்டு வந்த பறவை எது?

5. எலியாவின் உணவு என்ன?

6. கிறிஸ்தவராகிய உம்மால் பிறருக்குச் செய்யக்கூடிய உதவிகள் இரண்டை எழுதுக.

# 7 கடவுளின் பிரசன்னத்தைக் கண்ட பேதுரு

**மத்தேயு 14: 22-33**

*இறையாசிகள்!*

அன்பான பிள்ளைகளே,

இந்தக் கடிதத்தை வாசிக்கும் உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக! நான் இயேசுவின் சீடனாகிய பேதுரு. நான் இயேசுவை அதிகம் நேசிக்கின்றேன். எனது வாழ்வில் நான் எதிர்நோக்கிய புதுமையான அனுபவத்தை இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

ஒரு நாள் இயேசு எங்களை நோக்கி, படகிலேறி தமக்கு முன் அக்கரைக்குச் செல்லுமாறு கூறினார். மக்களை அனுப்பிவிட்டு, அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின் மேல் ஏறினார். நாங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து படகிலேறி அக்கரையை நோக்கி பயணம் செய்தோம். படகு சென்று கொண்டிருந்தபோது காற்று பலமாக வீசியது. படகு அலைகளால் அலைக்கழிக்கப்பட்டது. நாங்கள் பயமடைந்து அலறினோம். என்ன செய்வது? என்று தெரியாமல் தடுமாறினோம்.

அதன் பின்னர் வியத்தகு நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. ஒருவர் எங்களை நோக்கி கடல் மீது நடந்து வருவதைக் கண்டோம். அவர் இயேசு என்பதை முதலில் நாம் அடையாளம் காணவில்லை. நாங்கள் கலங்கினோம். கதறி அலறினோம் இயேசு எங்களிடம் ''துணிவோடிருங்கள் நான் தான் அஞ்சாதீர்கள்'' என்றார்.



உரு 7.1 இயேசு கடல் மீது நடத்தல்

இயேசுவின் அமைதியான வார்த்தையால் துணிவு பெற்ற நான் கடல்மீது நடந்து இயேசுவிடம் செல்ல விரும்பினேன். '' ஆண்டவரே நீர் தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்'' என்று இயேசுவிடம் கூறினேன். அவர் 'வா' என்று என்னை அழைத்தார்.

நான் படகிலிருந்து இறங்கி இயேசுவை நோக்கி கடல்மீது நடக்க ஆரம்பித்தேன். இது ஒரு புதுமையான அனுபவம்! நான் சிறிது தூரம் சென்றபோது பெருங்காற்று வீசியது. அலைகள் பலமாக மோதின. நான் பயமடைந்தேன். அதுமட்டுமல்ல நான் கடலில் மூழ்கத் தொடங்கினேன்.



உரு 7.2 கடலில் மூழ்கும் பேதுருவை இயேசு காப்பாற்றுதல்

''ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்'' எனக் கத்தினேன். உடனே இயேசு தம் கையை நீட்டி என்னைப் பிடித்து ''நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்?'' என்றார்.

நான் கடலில் மூழ்கி விடாது காப்பாற்றி என்னுடன் படகில் ஏறினார். கடும் காற்று அடங்கியது. நான் இந்த நிகழ்வை ஒருபோதும் மறக்க மாட்டேன்.

அன்று இயேசு கடல் மீது நடந்து என்னைக் காப்பாற்றியதன் மூலமாக கடவுளின் பிரசன்னத்தை நான் எனது அனுபவத்தில் கண்டேன். அன்பான மகனே! மகளே! நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் துணிவோடிருங்கள்.

இயேசுவில் விசுவாசப் பயணம் செய்யுங்கள். உங்கள் பிரச்சினைகளை இயேசுவிடம் கூறுங்கள். அவர் உங்கள் அருகில் வந்து பதிலளிப்பார்.

இறையாசிகள்!

உங்கள் அன்பு

பேதுரு.

## நான் இயேசுவில் நம்பிக்கையுடன் வாழ்வேன்!



### விண்ணப்பம்

*அன்பான தந்தையே,*
*சிறுவன்/சிறுமி ஆகிய நான் உம்மை நேசிக்கின்றேன். நீர் என்னைத் துணிவுபடுத்தும். விசுவாசத்துடன் பயணம் செய்ய உதவும். கடவுளின் பிரசன்னத்தை உணர அருள் தாரும்!*

*ஆமென்.*



### செயற்பாடு

**(1)** பின்வரும் வாக்கியங்களைக் கடிதத்திலிருந்து கண்டுபிடித்து பூரணப்படுத்துங்கள்.

1. துணிவோடிருங்கள் ......................................

2. ஆண்டவரே நீர் தாம் என்றால்...............................

3. .................................. ஏன் ஐயம் கொண்டாய்?


**(2)** சிறுபிள்ளையாகிய நீர் விசுவாசத்தை வளர்க்கும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

# 8 இரு சகோதரிகளுக்கு ஆறுதல்

**யோவான் 11: 28 - 45**


இயேசுவின் காலத்தில் பெத்தானியா எனும் ஊர் காணப்பட்டது. இங்கு இயேசுவை அதிகம் நேசித்த இலாசர் என்னும் ஒருவர் இருந்தார். அவருக்கு மரியா, மார்த்தா என்னும் இரு சகோதரிகள் இருந்தனர். ஒரு நாள் இலாசர் நோயுற்று இறந்து விட்டார். அவருடைய சகோதரிகள் இருவரும் கவலையடைந்தனர். இலாசரைக் கல்லறையில் வைத்து நான்கு நாட்கள் ஆகியிருந்த வேளையிலே இயேசு பெத்தானியாவுக்கு வந்தார்.



**மரியாவும் அவளுடன் வந்த யூதரும் அழுவதை இயேசு கண்டு மனம் கலங்கினார்.**




**அவர் இலாசரின் கல்லறைக்கு அருகில் சென்றார்.**




**அப்போது அங்கு இருந்தவர்கள் கல்லை அகற்றினார்கள். இயேசு விண்ணப்பம் செய்து உரத்த குரலில்**



## இலாசர் உயிர்பெற்று வெளியே வந்தார்.




அன்று மார்த்தாவும் மரியாவும் இயேசுவில் விசுவாசம் வைத்து வாழ்ந்தனர். இலாசரை உயிருடன் எழுப்பிய நிகழ்வால் இயேசுவால் ஆறுதல் அடைந்தனர்; கடவுளின் அன்பை உணர்ந்தனர். யூதர்களில் பலர் இயேசு செய்தவைகளைக் கண்டு அவரைப் பின்பற்றினர்.

**சிறுவர்களாகிய நீங்கள் இயேசுவை நேசியுங்கள்!**
**இயேசுவின் அன்பை உணருங்கள்!**

**மனன வாக்கியம்**

*தந்தையே, நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றேன்.*

*யோவான் 11:41*



## செயற்பாடு

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் “(✓)” எனவும் பிழையாயின் “(✕)” எனவும் கூட்டுக்குள் அடையாளமிடுக.


1. இலாசர் பெத்தானியாவில் வாழ்ந்தார். ☐
2. இலாசர் இயேசுவை நேசிக்கவில்லை. ☐
3. இலாசருக்கு மரியா, மார்த்தா எனும் இரு சகோதரிகள் இருந்தனர். ☐
4. இலாசர் இறந்து நான்கு நாட்களின் பின்னர் இயேசு அவரை உயிரோடு எழுப்பினார். ☐
5. இயேசு இலாசரை நேசித்தார். ☐

# 9 கடவுளைத் துதிப்போம் கடவுளை வணங்குவோம்

கடவுளின் அன்பு அளவற்றது, ஆழமானது. அவர் காட்டும் அன்புக்கு நாம் பிரதி அன்பு காட்டுதல் எமது கடமையாகும். கிறிஸ்தவ விழுமியங்களை வளர்க்க நாம் அவருடன் நெருங்கிய தொடர்பு கொள்வோம்.



உரு 9.1 பிள்ளைகள் விண்ணப்பம் செய்தல்



உரு 9.2 இயேசு மலையுச்சியில் விண்ணப்பம் செய்தல்

இயேசு இந்த உலகில் வாழ்ந்த காலத்தில் கடவுளுடன் தனது உறவானது நிலைத்திருக்க நாள்தோறும் விண்ணப்பம் செய்தார். வீட்டில், கடற் கரையில், மலையுச்சியில் இருந்து விண்ணப்பம் செய்தார் என திருவிவிலியத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

கடவுள் எமக்கு நாள்தோறும் வழங்கும் பாதுகாப்பு, ஓய்வு மற்றும் அனைத்து ஆசிகளுக்கும் நன்றி கூறுவோம். விண்ணப்பம் செய்து பிரதி அன்பைக் காட்டுவோம்.

அதேபோன்று இயேசு தனது பணியை ஆரம்பிக்குமுன் நாற்பது நாட்கள் வனாந்தரத்தில் உபவாசித்து, ஜெபித்து இருந்தார் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது நாளாந்த வாழ்வின் முக்கிய சந்தர்ப்பங்கள்,

முக்கியமான தீர்மானங்களை எடுத்தல் என்பனவற்றில் கடவுளின் வழிகாட்டுதல் எமக்குத் தேவைப்படுகின்றது. அதற்காகத் திருவிவிலியத்தை வாசித்து தியானம் செய்தல் அவசியம். இதன் வழியாக கடவுள் எமக்கு நல்வழி காட்டுகின்றார்.

கடவுளைத் துதிக்கும் வேளையில் அவர் மகிழ்வடைகின்றார். கடவுள் எமக்குத் தந்துள்ள அனைத்து ஆசிகளுக்கும் அவருக்குத் துதி செலுத்தி நன்றி கூறுவோம்.



உரு 9.3 பலவித ஆற்றல்களால் கடவுளைத் துதித்தல்

பாடல்களைப் பாடியும் இசைக் கருவிகளை இசைத்தும் இறைவனுக்குத் துதி செலுத்தலாம். அவரது அன்புக்குப் பிரதி அன்பு காட்டலாம்.

தாவீது அரசன் நடனமாடிக் கடவுளைத் துதித்தார் என திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் நடனம் மூலமாகக் கடவுளைத் துதிக்கலாம். அபிநயங்கள் மூலமாகவும் அவரைத் துதிக்கலாம்.

ஆற்றல் படைத்த ஓவியர்கள் அலங்கார சிற்பங்கள் அமைத்து ஆக்கம் செய்கின்றனர். சில திருச்சபைகளின் சுவர்களில் வரையப்பட்டுள்ள

சித்திரங்கள், வர்ணக் கண்ணாடிகளில் வரையப்பட்டுள்ள சித்திரங்கள் மூலமாகக் கடவுளுக்கு துதி செலுத்துகின்றனர்.

கேட்டல் குறைவு, பேச்சுத் திறன் குறைவு, பார்வைக் குறைவு உடைய பலர் எம் மத்தியில் வாழ்கின்றனர். அவர்கள் நாடகம், அபிநயங்கள் அல்லது தமக்கு விருப்பமான முறைகளைப் பின்பற்றலாம். அவர்களும் கடவுளின் அன்புக்கு மறுமொழி காட்டுவதில் எதுவித தடைகளும் இல்லை. (உதாரணம் - கண் பார்வை குறைவுற்றவர்கள் பிரேல் என்ற எழுத்து முறையால் பாடல்கள் எழுதிப் பாடுதல். பேச்சு திறன் குறைவுடையவர் அவர்களுக்கான சிறப்பு வழிபாட்டில் கலந்து கொள்ளல்.)

**எனது கைகள், கால்கள், வாய், கண்கள் என்பவற்றைப் பயன்படுத்தி கடவுள் அன்புக்கு பிரதி அன்பு காட்டுவேன்!**



**மனன வாக்கியம்**

***மத்தளம் கொட்டி நர்த்தனம் செய்து அவரைப் போற்றுங்கள். யாழினை மீட்டி குழலினை ஊதி அவரைப் போற்றுங்கள்.***

***திருப்பாடல்கள் 150 : 4***



## செயற்பாடு


1. கொலாஜ், சித்திரம், சிலை, பாடல் அல்லது நாடகம் மூலமாகக் கடவுளைத் துதிக்கும் முறையை ஆக்கம் செய்து ஏனைய மாணவர்கள் முன்னிலையில் காட்சிப்படுத்துங்கள்.

# 10 பன்னிரு திருத்தூதர்கள்

**மாற்கு 3:13 - 19**


இயேசு தமது பணிக்காக தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பரப்பவும் சிறப்பான வகையில் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து நியமித்தார். அவர்களுக்குத் திருத்தூதர் எனப் பெயரிட்டார். அவர்களுக்குப் பேய்களை விரட்டும் அதிகாரம் அளித்தார். நாம் பன்னிரு திருத்தூதர்களை அறிந்து கொள்வோம்.

நான் சீமோன் இயேசு எனக்கு பேதுரு எனப் பெயரிட்டார்.



நாமிருவரும் சகோதரர்கள். எமது தந்தை செபதேயு. இயேசு எங்களை ‘பொவனேர்கேசு’ என்று பெயரிட்டார். அது ‘இடியைப் போன்றோர்’ எனப் பொருள்படும்.


நான் யாக்கோபு




நான் யோவான்



நான் அந்திரேயா



எனது பெயர் பிலிப்பு




நான் பர்த்தலமேயு



நான் மத்தேயு




எனது பெயர் தோமா



நான் யாக்கோபு
என்னை எல்லோரும்
அல்பேயுவின் மகன்
யாக்கோபு என்பர்.









இயேசு அழைத்தாரே
சேவை செய்ய சீசர்
பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான்
பிலிப்பு, தோமா, மத்தேயு
பர்த்தலமேயு, ததேயு
யாக்கோபு, சீமோன், யூதாஸ்
பன்னிருவரே, பன்னிருவரே

நம்மை அழைப்பாரே
நம்மை அழைப்பாரே
நீயும் நானும் அவர்
சேவை செய்குவோம் (2)

**நாம் இயேசுவின் சீடர் வழி செல்வோம்!**



### விண்ணப்பம்

***அன்பான இயேசுவே, நீர் இவ்வுலகில் வாழும்போது பன்னிரு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தீர். அவர்களின் பணிக்காக நாம் நன்றி செலுத்துகின்றோம். நானும் உமது சீடனாக வர விரும்புகின்றேன்.***

***ஆமென்.***


### செயற்பாடு



1. இயேசு தேர்ந்தெடுத்த திருத்தூதர்கள் எத்தனை பேர்?
2. இயேசுவால் பேதுரு எனப் பெயரிடப்பட்டவர் யார்?
3. அல்பேயுவின் மகன் யார்?
4. செபதேயுவின் மகன்மார் யாவர்?

# 11 பெண் சீடர்கள்

**லூக்கா 8: 1-3**



உரு 11.1 இயேசுவின் பெண் சீடர்கள்

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் மக்களுக்குப் போதனை செய்தார். பல நோய்களிலிருந்து மக்களைக் குணமாக்கினார். நற்செய்தியை அறிவித்து நகரங்களைச் சுற்றி வந்தார். இயேசுவுடன் அவரது பன்னிரு திருத்தூதர்களும் அவருடன் பயணம் செய்தனர். பெண்கள் சிலரும் இருந்தனர்.

இயேசுவின் பெண் சீடர்கள் அவரது பணிக்கு உதவி செய்தனர். அவரை சிலுவையில் அறையும் வேளையில் அவருக்கு அருகில் இருந்தனர். இயேசு உயிர்த்தெழுந்தவுடன் முதன் முதலாக மகதலா மரியா உட்பட

பெண்களுக்குக் காட்சியளித்தார். உயிர்ப்பின் நற்செய்திக்குச் சான்று பகரவும் நற்செய்தியைப் பிறருக்குக் கொண்டு செல்லவும் பெண்களைத் தெரிவுசெய்தார்.

ஏழு தீய ஆவிகள் நிறைந்த மகதலா மரியா எனும் பெண் இருந்தாள். இயேசு அவளைக் குணமாக்கினார். அதன் பின்னர் அவள் இயேசுவின் பெண் சீடர்களுடன் இணைந்து கொண்டாள்.

ஏரோது மன்னனின் மாளிகை மேற்பார்வையாளர் கூசா ஆவர். கூசாவின் மனைவி யோவன்னா. யோவன்னாவும் இயேசுவின் பெண் சீடர்களுள் ஒருவராக இருந்தார்.

இயேசுவின் பெண் சீடர்களில் சூசன்னா இன்னுமொரு பெண் சீடராவார்.

அனைத்துப் பெண் சீடர்களும் இயேசுவின் பின் சென்று அவரது பணியில் ஒத்துழைப்பு வழங்கினார்கள். அது மட்டுமல்ல தமது உடைமைகளால் இயேசுவுக்குப் பணிவிடை செய்து வந்தார்கள். இவ்வாறு இவர்கள் இயேசுவின் பெண் சீடர்களாச் செயற்பட்டனர்.

**இயேசுவுடன் பயணம் செய்து அவர் பணிக்கு உதவும் சீடராகுவேன்!**



**மனன வாக்கியம்**

***ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னாவும் சூசன்னாவும் மேலும் பல பெண்களும் அவரோடு இருந்தார்கள்.***

*லூக்கா 8:3*

## செயற்பாடு

1. பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவைப் பின்பற்றிய பெண் சீடர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. அவர்கள் செய்த பணிகள் யாவை?


3. இன்று திருச்சபைகளில் திருப்பணி செய்யும் பெண்களின் பணிகள் இரண்டை எழுதுக.

# 12 இறைவார்த்தைகளைக் கேட்போம்

**லூக்கா 10:38-42**

**இயேசு மார்த்தா - மரியாவின் வீட்டுக்கு வந்தார்.**







**மார்த்தா சமையலறைக்குச் சென்று உணவு தயாரித்தல்**




மரியா எங்கே இருக்கிறாய்? பாருங்கள் இந்தப் பக்கம் வரவில்லை. நான் தனியாக செய் கின்றேனே...
ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே ... உமக்குக் கவலையில்லையா?
எனக்கு உதவி புரியும்படி அவளிடம் சொல்லும்
மார்த்தா... மார்த்தா... நீ பலவற்றைப் பற்றி கவலைப்பட்டுக் கலங்குகின்றாய்.
ஆனால் தேவையானது ஒன்றே, மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்.

மரியா இயேசுவின் காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தா விருந்தோம்பல் பணியில் ஈடுபட்டாள். என அறிந்தோம். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டல் அவசியம். மார்த்தா தவறான பணி செய்யவில்லை. அவளுக்கு இயேசுவின் வார்த்தைகளைக் கேட்கக் காலம் இல்லை. இறைவார்த்தையைக் கேட்டல் முக்கியம் என்பதை இங்கு இயேசு காட்டினார்.

**அமிர்தமே அற்புதமே**
**திவ்விய சத்தியம்**
**அமிர்தமே அற்புதமே**
**திவ்விய வசனம்**

**நான் இறைவார்த்தைகளைக் கேட்க விரும்புகின்றேன்.**
**இறைவார்த்தையை வாசிக்க விரும்புகின்றேன்.**



**விண்ணப்பம்**

*அன்பான ஆண்டவரே,*
*உமது வார்த்தைகளுக்கு நன்றி. தினமும் வேதாகமத்தை வாசித்து இறை வழிகாட்டலைப் பெற எமக்கு அருள் தாரும்.*
*ஆமென்.*





**செயற்பாடு**

1. இயேசு கூறியவாறு மரியா தெரிந்து கொண்ட நல்ல செயல் யாது?


2. அந்த நற்செயலானது உமது வாழ்வில் வெளிப்படும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

# 13 நாம் எல்லோரும் நண்பர்கள் - எனக்கு பகைவர் இல்லை



**விளையாடும் வேளையில் ஒருவர் மயக்கமுற்று விழுகின்றார். பின்னால் உட்கார்ந்து விளையாட்டில் சேர்த்துக் கொள்ளப்படாத பிள்ளை ஒடிவந்து உதவி செய்ய முன்வருதல்**






நாம் இயேசுவின் போதனைகளை அறிந்து செயற்படுவோம்.

1. உங்கள் பகைவரிடம்
அன்பு கூருங்கள்.

2. உங்களை வெறுப்போருக்கு
நன்மை செய்யுங்கள்.

3. உங்களை சபிப்போருக்கு
ஆசி கூருங்கள்.

4. உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக
இறைவனிடம் வேண்டுங்கள்.

5. உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு
மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.

6. உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர்
உங்கள் அங்கியையும் எடுத்துக் கொள்ளப் பார்த்தால் அவரைத் தடுக்காதீர்கள்.

7. உங்களிடம் கேட்கும் எவருக்கும்
கொடுங்கள்.

8. உங்களுடைய பொருள்களை எடுத்துக்கொள்பவரிடமிருந்து
அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள்.

9. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்
என்று விரும்புகிறீர்களோ, அதையே
நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

இயேசு தமது பகைவரிடம் அன்பு செலுத்துமாறு கற்பித்தார். இதனை செயலில் காட்டுதல் மிகவும் சிரமம் என்பதைப் போதித்தார்.

நாம் இவற்றைப் படிப்படியாக செயலில் காட்ட முயல்வோம். அப்போது இயேசு எம்மை நேசித்து உதவி செய்வார். எமது மனதில் புது மலர்ச்சி ஏற்படும். உள்ளம் அமைதி அடையும் இயேசு எமக்கு ஆசிகளை வழங்கி இறைபிள்ளைகளாக மாற்றுவார்.

## நான் என்னை வெறுப்போரை நேசிப்பேன்!



**மனன வாக்கியம்**

***உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். (லூக்கா 6:36)***



## செயற்பாடு

***"அ" பகுதிக்கு பொருத்தமானதை "ஆ" பகுதியுடன் இணையுங்கள்***

| அ | ஆ |
|---|---|
| • உங்களை வெறுப்போருக்கு | • அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் |
| • உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக | • கொடுங்கள் |
| • உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர் | • அவற்றை திருப்பிக் கேட்காதீர்கள் |
| • உங்களுடைய பொருள்களை எடுத்துக் கொள்வோரிடமிருந்து | • மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் |
| • பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ | • நன்மை செய்யுங்கள் |
| • உங்களிடம் கேட்கும் எவருக்கும் | • ஆசி கூருங்கள் |
| • உங்களை சபிப்போருக்கு | • இறைவனிடம் வேண்டுங்கள் |
| • உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு | • அங்கியையும் எடுக்க தடுக்காதீர்கள் |

# 14 பேதுருவின் மாமி குணமடைதல்

**லூக்கா 4:38-39**

**லூக்கா 4:38**

பின்பு இயேசு தொழுகைக் கூடத்தை விட்டு, சீமோன் வீட்டிற்குள் சென்றார்.

சீமோனின் மாமியார் கடுங்காய்ச்சலால் துன்புற்ற நிலையில் இருந்தார்.

அவர்கள் அவருக்காக இயேசுவிடம் வேண்டினார்கள்.

**லூக்கா 4:39**

இயேசு அவரருகில் நின்று, காய்ச்சலைக் கடிந்து கொள்ள அது அவரை விட்டு நீங்கிற்று.

உடனே அவர் எழுந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தார்.

**அருட்தந்தை** : இறையாசிகள்! ஓய்வுநாள் பாடசாலைப் பிள்ளைகளின் திறமைகளை வெளிக்காட்டும் நாடகத்துக்கான ஆயத்தங்கள் முடிந்துவிட்டனவா?

**சுகந்தி** : இறையாசிகள்! நாங்கள் எல்லா ஆயத்தங்களையும் செய்து முடித்துவிட்டோம். இயேசு, பேதுருவின் மாமியைக் குணப்படுத்தும் நிகழ்வை நடித்துக் காட்டப் போகின்றோம்.


**அருட்தந்தை** : நல்லது பிள்ளைகளே ... சரி ! உங்கள் திறமைகளைப் பார்ப்போம்.

(இயேசு தொழுகைக் கூடத்தில் போதனை செய்தல். பேதுரு பரபரப்புடன் இயேசுவிடம் ஓடி வருதல்...)

**பேதுரு** : எனது மாமியார் கடுங் காய்ச்சலால் துன்புறுகின்றார். அவரைக் குணப்படுத்தும். இயேசுவே! எங்கள் வீட்டுக்கு வாரும்...

**இயேசு** : நல்லது பேதுரு. இறைவனிடம் வேண்டுதல் செய்ய நான் உனது வீட்டுக்கு வருகின்றேன்.
(இயேசு தொழுகைக் கூடத்திலிருந்து பேதுருவின் வீட்டுக்குள் பிரவேசித்தல்)

**பேதுருவின் மாமி** : ம்... ம்... எனக்குக் காய்ச்சல் நடுக்கமாக இருக்குது இயேசுவா இங்கு வந்துள்ளார்?
(இயேசு பேதுருவின் மாமியை நோக்கி... கைகளை வைத்து விண்ணப்பம் செய்து குணமாக்கல்)



உரு 14.1 இயேசு பேதுருவின் மாமிக்கு குணமளித்தல்

**பேதுருவின் மாமி :** (குணமடைந்து கதைத்தல்) எனக்குக் காய்ச்சல் குணமாகிவிட்டது. எனக்கு நிம்மதி (இயேசுவை நோக்கி ...) என்னைக் குணப்படுத்தியமைக்கு மிக்க நன்றி. நான் உண்பதற்கு ஏதாவது கொண்டு வருகின்றேன்.

(நடிகர்கள் மேடைக்கு வந்து வாழ்த்து தெரிவித்தல்)

---

**அருட்தந்தை :** (கைகளைத் தட்டுதல்) மிகவும் நன்றாக இருந்தது. நீங்கள் நன்றாகப் பயிற்சி செய்துள்ளீர்கள். நாடகத்தை அழகாக நடித்துக் காட்டினீர்கள்.

**கவீன் :** மிக்க நன்றி தந்தையே!

**அருட்தந்தை :** பிள்ளைகளே, உங்களது நாடகத்தைப் பார்த்தவுடன் அன்று இயேசு குணப்படுத்திய காட்சி என் முன்னால் தோன்றியது. அவர் நோயாளரைக் குணப்படுத்தினார். அவருக்குக் குணப்படுத்தும் வல்லமை இருந்தது. பேதுரு தனது மாமியைக் குணப்படுத்துமாறு வேண்டினார். பேதுருவின் வேண்டுதலினால் அவள் குணமடைந்தாள். நாம் இயேசுவிடம் சுகம் கிடைக்குமாறு வேண்டினால் அவர் எமக்கும் சுகமளிப்பார். அது மட்டுமல்ல பேதுருவின் மாமி குணமடைந்த உடனே இயேசுக்குப் பணிவிடை செய்தார். நாம் கடவுள் எமக்குத் தந்துள்ளவைகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவர் எமக்கு அருளிய பலத்தால் எமது பொறுப்புக்களை நிறைவேற்றுதல் எமது கடமையாகும். சரி... நான் போய் வருகிறேன் பிள்ளைகளே!

**பிள்ளைகள் :** மிக்க நன்றி தந்தையே!
இறையாசிகள்!

**சிறுபிள்ளையாகிய நான் கடவுளின் சுகம் பெற்று வாழ்வேன்!**

### மனன வாக்கியம்

*"எழுந்து செல்லும் உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது"*
*லூக்கா* 17:19

## செயற்பாடு

1. இயேசு பேதுருவின் மாமியைக் குணப்படுத்திய நிகழ்வைச் சித்திரமாக வரைக.

2. இயேசு நோயாளரைக் குணப்படுத்திய இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

3. நோயுற்ற உமது நண்பருக்காக நீர் செய்யும் விண்ணப்பம் ஒன்றினை எழுதுக.

# 15 முடக்குவாதமுற்றவர் குணமடைதல்


**மாற்கு 2:1-12**

ஒரு நாள் இயேசு கப்பர்நகூமுக்குச் சென்றார். முடக்குவாதமுற்ற நோயாளர் ஒருவர் இருந்தார். அவருக்கு இயேசுவை விசுவாசித்து வாழ்ந்த நான்கு நண்பர்கள் இருந்தனர். முடக்குவாதமுற்ற நண்பரை இயேசுவிடம் கொண்டு வந்தனர்.

உன்னத இயேசு மண்ணிலே செய்த மகிமைகள் கேளுங்கள்
ஆதரவற்ற பிணியாளரை விடுவித்ததைக் கேளுங்கள்
அவ்வாறே அவர் செய்த புதுமைகளில் ஒன்றாம்
முடக்குவாதக்காரனைச் சுகப்படுத்திய புதுமையைக் கேளுங்கள்

ஒரு ஊரிலே ஒரு முடக்குவாதக்காரன் இருந்தானாம் - நல்ல நண்பர்கள்
நால்வரும் அவனோடே இருந்தனராம் - அந்த நாட்களில்
மீட்பர் இயேசு கப்பர்நகூமில் ஒரு வீட்டில் போதனை செய்வதை அறிந்து
நண்பர்கள் முடக்குவாதக்காரனை இயேசுவிடம் கொண்டு சென்றனராம்

கட்டிலோடு தூக்கிவந்த முடக்குவாதக்காரனை
இயேசுவிடம் கொண்டு செல்ல முடியாவண்ணம் சனக்கூட்டமாம்
கூரையில் ஏறி ஓட்டினைப் பிரித்து கட்டிலோடு அவனை
இயேசுவின் அருகில் இறக்கினராம்



உரு 15.1 முடக்குவாதமுற்றவரை இயேசு இருந்த வீட்டிற்குள் கூரை வழியாக இறக்குதல்

சின்னஞ்சிறு பாலர் நீங்கள் இப்புதுமையை நினைவில் கொள்ளுங்கள்
உங்கள் நண்பர் அனைவருக்கும் எப்போதும் நன்மை செய்யுங்கள்
கடவுளை என்றும் நம்புங்கள் நல்வழி செல்லுங்கள்
நட்பை மதிக்கும் கிறிஸ்தவராய் உலகிற்கு ஒளி வீசுங்கள்

நோய்கள் துன்பங்கள் ஓடிடுமே இயேசு ராஜாவின் முன்னாலே
ஏழைகளுக்கு என்றுமே துணை நின்றிடுங்கள்
சொன்ன நல்ல அறிவுரைகளை மனதில் கொண்டிருங்கள்
இறை விசுவாசத்தோடு வாழ்க்கையை வென்றிடுங்கள்!

**சிறுவராகிய நாம் நல்ல நண்பர் ஆவோம்.**
**விசுவாசமுடன் வாழ்வோம்!**



**விண்ணப்பம்**

*அன்பான ஆண்டவரே,*

*உம்மில் நம்பிக்கையுடன் வாழ எனக்குக் கருணை காட்டும். நீர் எனக்குத் தந்த நண்பர்களுக்காக உமக்கு நன்றி. அவர்களது தேவைகளை நிறைவேற்ற எனக்கு உதவி செய்தருளும்.*

*ஆமென்.*



## செயற்பாடு


(1) பொருத்தமான விடையை இணையுங்கள்.

| | |
|---|---|
| • இயேசு சென்ற ஊர் | • குணம் |
| • முடக்குவாதமுற்றவரைக் கட்டிலில் தூக்கி வந்த நண்பர்களின் எண்ணிக்கை | • நம்பிக்கை |
| • முடக்குவாதமுற்றவரைக் கொண்டு சென்றவர்களிடம் காணப்பட்ட நற்பண்பு | • கூரையின் வழியாக |
| • முடக்குவாதமுற்றவரை இயேசுவிடம் கொண்டு வந்த விதம் | • கப்பர்நகூம் |
| • இயேசு முடக்குவாதமுற்றவருக்கு அளித்தது | • நான்கு |

(2) உமது நண்பருக்கு நீர் செய்யக்கூடிய உதவிகள் இரண்டைக் குறிப்பிடுக.

# 16 தூய ஆவியின் கனி

**கலாத்தியர் 5:22**




**ஆசிரியர்** : *இன்று எனக்கு மிகவும் சந்தோஷமான நாள். இன்று காலையில் அதிபர் ஒரு செய்தியை உங்களுக்குக் கூறும் படியாகச் சொன்னார்.*

**ரெபேக்கா** : *என்ன ஆசிரியர்? நீங்கள் சந்தோஷமாய் இருக்கிறீர்கள். அது என்னவென்று நாங்களும் அறிந்துகொள்வதற்கு ஆவலாய் இருக்கிறோம்.*

**மாணவர்கள்** : *ஆம். என்ன ஆசிரியர் அது?*

**ஆசிரியர்** : *உங்களுக்கு நினைவிருக்கின்றதா? எமது நூலகத்தில் மிகவும் பழமைவாய்ந்த புத்தகங்களைப் பாதுகாத்து*

ஒழுங்கமைப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைச் செய்தோம். அதற்காக எமது வகுப்பில் கிறிஸ்தவப் பாடத்தைக் கற்கும் ரெபேக்கா, அருண், ஜோன், தர்ஷன் அனைவரும் தெரிவுசெய்யப்பட்டார்கள் அல்லவா?

**தர்ஷன்** : ஆம் ஆசிரியர், எங்களுக்கு நூலகத்தின் பொறுப் பாசிரியரின் வழிகாட்டலுடன் அங்கேயுள்ள திருவிவிலி யத்துடன் தொடர்புள்ள விபரங்கள் அடங்கிய நூல்கள், பழைய வேதாகமம், மேலும் மிகப் பழமைவாய்ந்த பல புத்தகங்களையும் ஒழுங்கமைத்து வைப்பதற்கான வேலை கொடுக்கப்பட்டது.

**ஜோன்** : இந்த வேலையானது இலகுவானதல்ல என்பதை உணர்ந்தோம். சில புத்தகங்களின் ஏடுகள் கழன்று இருந்தன. அவற்றைத் தேடி சரியாக ஒழுங்குபடுத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆனால் நாம் அவற்றை பொறுமையோடு ஏற்றுக்கொண்டு சரியான முறையில் செய்து முடித்தோம். அக்கா, அண்ணா அனைவரும் எங்களுக்கு உதவி செய்தனர்.

**ஆசிரியர்** : ஆம், அதைப்பற்றித்தான் நான் சொல்கிறேன். நீங்கள் அவ்வேலையை மிகவும் சிறப்பாக நம்பிக்கையோடு செய்தீர்கள் என நூலகப் பொறுப்பாசிரியர் அதிபருக்கு அறிவித்திருக்கிறார்.

**அருண்** : ஆசிரியர் அந்த வேலையைச் செய்யும்போது எமக்குப் பயமும் ஏற்பட்டது. நூலகப் பொறுப்பாசிரியர் கூறினார், எமது நூலகத்தில் தான் மிகவும் முக்கியமான பழமை வாய்ந்த பல நூல்கள் பாதுகாப்பாக இருக்கின்றன எனவும், இவற்றில் சில புத்தகங்கள் வேறு எங்குமே இல்லை என்றும் கூறினார்.

**தர்ஷன்** : ஆம், ஆசிரியர் நாங்கள் ஒவ்வொரு நாளும் இந்த வேலைக்குச் செல்லும்போது நூலகத்தின் அருகில்

உள்ள மாமரத்தின் கீழே சென்று ஜெபித்துவிட்டுச் சென்றோம். ஆசிரியர் எங்களுக்குக் கற்றுத்தந்தது போன்று எந்த ஒரு வேலையைச் செய்யும்போதும் ஜெபித்து நம்பிக்கையோடு குழப்பமின்றிச் செய்ய வேண்டும் என்பது எமக்கு நினைவில் இருந்தது.

**ஆசிரியர்** : ஆம் தர்ஷன். உங்களுக்கு நினைவிருக்கின்றதா இதற்கு முன்னைய வகுப்பில் நாம் தூய ஆவியின் கனியின் ஆறு குணவியல்புகள் பற்றி கற்றுக் கொண்டோம் அல்லவா?

**அருண்** : எனக்கு நினைவிருக்கின்றது. அன்பு, மகிழ்வு, அமைதி

**ரெபேக்கா** : நானும் சொல்கிறேன் பொறுமை, பரிவு, நன்னயம்

**ஆசிரியர்** : சரியாகச் சொன்னீர்கள் மேலும் தூய ஆவியின் கனியின் மூன்று குணவியல்புகள் உண்டு. அவை யாவன நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம். உங்கள் நான்கு பேரிடமும் இந்த தூய ஆவியின் கனியின் குணவியல்புகள் இருந்தமையால் தான் பொறுமை யோடு அனைவரும் அன்புடன் இணைந்து இந்த வேலையைப் பூரணமாக செய்தீர்கள். எனக்கு மிகவும் சந்தோஷம். நாம் அனைவரும் இந்த நான்கு பேரையும் கைதட்டிப் பாராட்டுவோம்.

**இயேசுவின் பிள்ளையாகிய எனது வாழ்வில் தூய ஆவியின் கனியின் குணவியல்புகள் வெளிப்படும் என்பதை நம்புகிறேன்.**



**விண்ணப்பம்**

*அன்பான இயேசுவே,*
*நீர் என் உள்ளத்தில் வாரும். அதில் வாசமாய் இரும். தூய ஆவியின் கனியின் குணவியல்புகளை என்னில் விருத்தியடையச் செய்யும்.*

*ஆமென்.*



## செயற்பாடு

1. கலாத்தியர் 5:22 இல் குறிப்பிடப்பட்டுள்ள தூய ஆவியின் கனிகளை நினைவிற் கொண்டு எழுதுவோம்.

2. தூய ஆவியின் கனியின் குணவியல்புகளை எடுத்துக் காட்டும் ஆக்கம் ஒன்றைத் தயாரியுங்கள்.

# 17 சுகம் பெற்ற தொழுநோயாளி

**மாற்கு 1:40-45**



தொழுநோயாளி ஒருவர்
வந்தார் இயேசுவிடம்
வேண்டினார் சுகம் பெற
முழந்தாள் படியிட்டே //

ஆண்டவரே நீர் விரும்பினால்
தூய்மையாக்கும் இன்றென்னை
என வேண்டி இவ்வாறே
மன்றாடினார் நம்பிக்கையோடே //

பாவியான மக்களென்று
கருதப்பட்டனர் தொழுநோயாளர்
ஒதுக்கப்பட்டனர் முழு யூதேயாவிலும்
மக்களால் ஒதுக்கப்பட்டனரே //

இயேசுவோ எல்லை இல்லா
பரிவோடு கை நீட்டி
இரக்கத்தோடு அவனைத் தொட்டு
கூறினார் இவ்வாறே //

விரும்புகிறேன் நலமாகு
எனக் கூறிய உடனே
நோய் நீங்கி நலமானார்
அவர் உடனே நலமடைந்தாரே //


உரு 17.1 சுகம் வேண்டி வந்த
தொழுநோயாளி

இயேசு சுகமளித்தார் என்பதை எவருக்கும் சொல்ல வேண்டாம் எனக் கூறி அனுப்பினார் அவனை குருவினிடத்தினிலே //

சுகமடைந்த தொழுநோயாளி எவருக்கும் சொல்ல வேண்டாம் என்பதை உடனடியாகச் சென்று பரப்பினாரே இந்நிகழ்வை ஊர் முழுதும் //

இயேசு சுவாமி அனைவரையும் இரக்கம் காட்டி நேசித்த வண்ணமாய் நித்தமும் செயல்படுவோம் இவ்வாறே நாமும் அனைவருக்கும் இரக்கம் செய்வோம் //

அவரைப் போல் நாமும் அனைவரையும் கருணையோடு நோக்குவோம். நல்லதொரு குணாதிசயம் இதை நாள் தோறும் கடைப்பிடித்து வாழ்வோம் //



உரு 17.2 குணமடைந்த தொழுநோயாளர் சான்று பகருதல்



**விண்ணப்பம்**

***அன்பின் இறைவா,***
***சிறிய பிள்ளையாகிய என்னிடம் நீர் வாசம் செய்யும். எனது பாவத்திலிருந்து என்னைத் தூய்மைப்படுத்தும். உமது இரக்கத்தை எனக்களித்து உமது கிருபையால் என்னை நிரப்பும்.***

***ஆமென்.***



**செயற்பாடு**

1. சிறுவர்களாகிய நீர் நோயாளர் ஒருவருக்கு உதவிய சந்தர்ப்பத்தைக் குறித்து உமது நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக.

# 18 நல்ல ஆயர் இயேசு

**லூக்கா 15:3-7**

**ஆசிரியர்** : ஓர் ஆயரின் ஆட்டுக் கொட்டிலில் அவருக்கு நூறு ஆடுகள் இருந்தன.



உரு 18.1 ஆயன் மந்தையைப் பாதுகாத்தல்

**பிரியா** : ஆயர் என்றால் யார்?

**ஆசிரியர்** : ஆயர் என்பவர் மந்தைகளைப் பார்த்துக் கொள்பவர். அவரிடம் நூறு ஆடுகள் இருந்தன. ஒரு நாள் ஒரு ஆடு காணாமல் போய்விட்டது.

**பிள்ளைகள்** : ஐயோ, அந்த ஆடு பாவம் அல்லவா?

ஆசிரியர் : சரி சொல்லுங்கள் பார்ப்போம் ஆயர் இப்போது என்ன செய்திருப்பார்.

சாந்தி : அந்த ஆட்டைத் தேடி இருப்பார்.

ஆசிரியர் : ஆம் சரி.



உரு 18.2 காணாமற் போன ஆட்டைத் தேடிச் செல்லுதல்

குமார் : அப்படியானால் அந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளுக்கும் என்ன நடந்தது?

**ஆசிரியர்** : அந்த ஆடுகளை மிகவும் பாதுகாப்போடு வைத்துவிட்டு ஆயர் காணாமற்போன ஆட்டைத் தேடிச் சென்றார்.

**அருண்** : அப்படியானால் கிடைத்ததா ஆசிரியர்?

**ஆசிரியர்** : ஆம். ஆயர் அந்த காணாமற்போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடித்தார்.



உரு 18.3 காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடித்தல்

**ரவி** : ஆம், எங்களுக்கும் நல்ல சந்தோஷம்

**ஆசிரியர்** : ஆம், சரி ஆயருக்கும் இவ்வாறான மகிழ்ச்சி ஏற்பட்டது, ஆயர் என்ன செய்தார் தெரியுமா?



உரு 18.4 கண்டுபிடித்த ஆட்டைத் தூக்கிச் செல்லுதல்

**அருண்** : காணாமற்போய் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டைத் தோள் மேல் போட்டுக்கொண்டு வந்திருப்பார்.

**ஆசிரியர்** : ஆம். ஆயர் ஆட்டை வீட்டுக்குக் கொண்டுவந்து தனது நண்பர்களை அழைத்து ''காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்னோடு மகிழுங்கள்'' எனக் கூறி அவர்களோடு மகிழ்ச்சியடைந்தார்.

**திலீபன்** : நல்ல அழகான உவமைக் கதை.

**ஆசிரியர்** : சரி சொல்லுங்கள் பார்ப்போம். உவமைக் கதையில் ஆயருக்குச் சமமாக கருதப்படுபவர் யார் என்பதை?

**சுரேன்** : இயேசுவானவர் அல்லவா ஆசிரியர்?

ஆசிரியர் : ஆம், இயேசுவானவர் தான் எமது நல்ல ஆயர்.

குமார் : அப்படியானால் காணாமற்போன ஆடு யார்?

ஆசிரியர் : அவர்கள்தான் தவறு செய்கின்றவர்கள். கீழ்ப்படியாதவர்கள், இயேசுவின் அன்பைவிட்டு விலகிச் சென்றவர்கள். பாருங்கள் இயேசுவானவர் ஒரு ஆட்டையாவது காணாமற் போக விடாமல் பாதுகாத்தார். நாம் வழிதவறிச் செல்வதை அவர் விரும்பவில்லை. அவ்வாறு ஏற்படுவதற்கு இடம் கொடாமல் காணாமற் போன ஆட்டைத் தேடி சென்றது போல், எம்மையும் இயேசு தேடி வருவார். ஏன் என்றால் அது அவரின் எல்லையில்லா இரக்கமாகும். அவர் எம்மையும் அன்போடு அரவணைத்து இரக்கம் காட்டுகின்றார். எம்மைப் பாதுகாக்கின்றார்.

இப்பாடத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள்

1. இயேசுவின் அன்பும் பாதுகாப்பும் எமக்கு எப்போதும் கிடைக்கின்றது.
2. நாம் தவறு செய்து இயேசுவை விட்டுத் தூரமாகும்போது எம்மைத் தேடி வருகின்றார்.
3. எம்மைத் தேடிக் கண்டுபிடிக்கின்றார்.
4. தேடிக் கண்டுபிடித்து மகிழ்ச்சியடைகின்றார்.
5. இயேசுவின் எல்லையில்லா இரக்கம் எங்களுடன் என்றும் உள்ளது.



**விண்ணப்பம்**

*அன்பின் இயேசுவே,*
*நீர் எனது நல்லாயர்; நான் செய்த தவறுகளை மன்னியுங்கள்;*
*உம் அருகில் என்னை நிலைத்து இருக்கச் செய்யுங்கள்.*
*ஆமென்.*



## செயற்பாடு

1. இந்த உவமையில் நல்ல ஆயரான இயேசுவிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

2. நீர் நண்பருக்குக் காட்டிய இரக்க நிகழ்வொன்றைக் கவிதையாக எழுதுங்கள்.

# 19 இயேசுவும் சக்கேயுவும்

**லூக்கா 19: 1- 10**

இயேசுவானவர் மிகவும் வேறுபட்ட ஒழுங்கமைப்பில் செயற்படும் ஒருவர். அவர் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களையும் ஏற்றுக்கொண்டார். அதுமட்டுமல்லாது சமூகத்தால் பாவியாகக் கருதப்பட்டவர்களுடனும் அவர் நட்புக் கொண்டார்.

அக்காலத்தில் சக்கேயு என்னும் பெயருடைய மிகக் குட்டையான மனிதர் ஒருவர் இருந்தார். ஒருநாள் இயேசு எரிகோவுக்கு வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டார். இயேசு பாவிகளினதும் வரிதண்டுவோரினதும் நல்ல நண்பன் என்பதை மக்கள் மூலமாக அறிந்திருந்தார். எனவே சக்கேயு இயேசுவைப் பார்க்க மிகவும் ஆவலோடு இருந்தார்.




**இயேசு வந்து மரத்தை அண்ணாந்து பார்த்து...**










சக்கேயு இயேசுவைத் தன் வீட்டில் ஏற்றுக் கொண்டார்.
ஆண்டவரே என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன்.
நான் அநீதியாய் பெற்றுக் கொண்டவைகளை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.
இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று இவரும் ஆபிரகாமின் மகனே.

சக்கேயு இயேசுவைச் சந்தித்த பின்...

- உண்மையாய் மனம்மாறினார்
- தனது வாழ்வை மாற்றிக் கொண்டார்
- அவர் மிகவும் மாறுபட்ட மனிதனானார்
- இயேசுவை ஏற்றுக் கொண்டார்
- அவரின் பாவத்திற்கு மீட்பு கிடைத்தது.



**விண்ணப்பம்**

***ஆண்டவரே நீர் விரும்பாத சிந்தனைகள் அனைத்தும் என்னிடம் காணப்படும் பாவங்களாகும். என்னை மன்னியுங்கள். நான் செய்த தவறுகளை ஏற்றுக்கொண்டு, நல்ல பிள்ளையாய் வாழ வரம் தாருங்கள்.***

***ஆமென்.***



## செயற்பாடு

1. சக்கேயு வெளிப்படுத்திய இரண்டு தீர்மானங்களைக் குறிப்பிடுக.

2. கீழே குறிப்பிடப்பட்ட சிறிய பாடலை அனைவரும் சேர்ந்து பாடுவோம்.

**குள்ள மனிதன் சக்கேயு**
**இரட்சகர் இயேசுவைக் காண**
**அத்தி மரத்தில் ஏறினார்**
**அன்பர் இயேசுவைக் காண**

# 20 கடவுளுக்குக் கீழ்ப்படிந்த சாமுவேல்

## 1. சாமுவேல் 3:1-10

தீபன்,

நீங்கள் ஒய்வு நாள் பாடசாலைக்கு ஏன் வரவில்லை? காரணம் என்ன? சுகயீனமா? அம்மாவை என்னோடு கதைக்கும்படி கூறுங்கள்.

இப்படிக்கு
ஒய்வு நாள் பாடசாலை ஆசிரியர்
ரூத்



தீபனின் தாய் ஆசிரியருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

**அம்மா** : ஹலோ, தீபனின் ஒய்வு நாள் பாடசாலை ஆசிரியரா கதைக்கிறீர்கள்?

**ஆசிரியர்** : ஆம் வசந்தி, ஆசிரியர்தான் கதைக்கின்றேன்.

**அம்மா** : ஆசிரியரே தீபனை ஒய்வு நாள் பாடசாலைக்கு போகச் சொல்லி எவ்வளவுதான் சொன்னாலும் அவன் முடியாது என்கிறான்.

**ஆசிரியர்** : அதற்கு என்ன காரணம்? எங்கே மகன்?

**அம்மா** : ஆசிரியருக்கு அனுப்ப வேண்டுமென்று கடிதம் எழுதுகிறான்.

ஆசிரியர் அவர்களுக்கு,

நான் ஓய்வு நாள் பாடசாலைக்கு வரவேண்டும். ஆனால் இவ்வாறு பல நாட்கள் வருகிறேன் எனக் கூறி ஆசிரியருக்குப் பொய் சொன்னேன். என் மனது என்னையே குற்றம் சொல்கிறது. அதுதான் ஆசிரியர் நான் வரவில்லை. நான் தான் ஆசிரியரின் புத்தகத்தைக் கிழித்தேன். என்னை மன்னியுங்கள்.



இப்படிக்கு
தீபன்

(கடிதம் கிடைத்தவுடன் ஆசிரியர் தீபனின் வீட்டுக்கு வந்தார்)

**ஆசிரியர்** : தீபன்... தீபன் எங்கே, மகனே
எனக்கு உங்கள் கடிதம் கிடைத்தது. எனவேதான் நான் வந்தேன் நீங்கள் நல்ல கீழ்ப்படிவான பிள்ளை அல்லவா? சின்ன சாமுவேலைப் போன்று வருவதைப் பார்ப்பதற்கு எனக்கு மகிழ்ச்சியே.

**தீபன்** : சாமுவேலைப் போல்... அது யார் ஆசிரியர்?

**ஆசிரியர்** : சாமுவேல் உங்களைப் போன்று சிறிய ஆண்பிள்ளை. அவர் ஏலி என்னும் குருவிடம் வளர்ந்து வந்தார். ஒரு நாள் சாமுவேலுக்கு தனது பெயரைச் சொல்லி யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. சாமுவேல் ஏலி குருவிடம் சென்று "நீங்கள் என்னை அழைத்தீர்களா?" எனக் கேட்டார். அப்போது, "நான் அழைக்கவில்லையே" என ஏலி குருவானவர் சாமுவேலிடம் கூறினார். இவ்வாறு மூன்று முறை அழைக்கும் சத்தம் கேட்டது. அப்போது சாமுவேலை அழைப்பது கடவுள் என்பதை அறிந்து கொண்ட குருவானவர் ஏலி கடவுளின் குரலுக்கு செவி கொடுக்குமாறு சொல்லிக் கொடுத்தார். நான்காவது முறையாக கடவுள் அழைத்தபோது கடவுள் தன் பெயரை சொல்லி அழைப்பதை அறிந்த சாமுவேல் இவ்வாறு கூறினார்.

''ஆண்டவரே பேசும் உம் அடியேன் கேட்கிறேன்'' என மிக நன்றாக கீழ்ப்படிவான வார்த்தையால் கடவுளுக்கு மறுமொழி கூறினார்.

தீபன் : ஆம் நானும் சாமுவேலைப் போல் இருப்பதற்கு விரும்பு கிறேன். என்னிடமும் கடவுள் பேசுவாரா?

ஆசிரியர் : ஆம் சிறியவர்களாகிய உங்களைக் கடவுள் விசேடமான பணிக்காகத் தெரிந்தெடுத்திருக்கிறார். முக்கியமாக நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, செவி கொடுத்து இருப்பது அவசியமாகும்.



உரு 20.1 குருவானவர் ஏலியும் சாமுவேலும்

ஆசிரியர் : கடவுளின் நோக்கம் பலவிதமானது. அவரின் செய்தியைக் கொடுப்பதற்குச் சிறியவர்களாகிய உங்களையும் தெரிவு செய்யலாம். ஆனால் அவரின் செய்தியை அறிந்துகொள்ள வேண்டுமானால் ஜெபத்தினூடாக கடவுளின் அருகில் வாழவேண்டும்.

தீபன் : கடவுளின் அருகில் வாழ்வது எவ்வாறு?

ஆசிரியர் : அன்று சிறிய சாமுவேல் ஆலயத்தில் சிறிய சிறிய வேலைகளைச் செய்து தேவாலயத்திலே வாழ்ந்து வந்தார். அவர் கடவுளின் அருகிலே வாழ்ந்தார் என்பது நிச்சயமாகும். ஜெபத்தினூடாக கடவுளின் அருகில் வாழ்ந்தார். நீங்களும் கடவுளின் அருகில் இருந்து, அவருக்குப் பணி செய்வதையே எதிர்ப்பார்த்திருக்கிறார். நான் நம்புகின்றேன் நிச்சயமாக

உங்களையும் அவரின் பணி செய்வதற்கே தெரிந்தெடுத்திருக்கின்றார்.

**தீபன்** : ஆ... என்னையுமா?

**ஆசிரியர்** : கடவுளுக்குச் செவிகொடுத்திருக்கும் உங்களை அவர் ஏற்கனவே அழைத்துவிட்டார். இறைவார்த்தையினூடாக பேசுவதற்கும் இறைவழிகாட்டலைப் பெற்றுக்கொடுப்பதற்கும் கடவுள் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இவ்வாறு கடவுளுக்குக் கீழ்ப்படிவதற்கு உங்களுக்கு விருப்பம் அல்லவா?

**தீபன்** : சாமுவேலைப் போன்று நானும் கீழ்ப்படிவேன். ஓய்வுநாள் பாடசாலைக்கு வந்து இறை சத்தத்திற்குச் செவிகொடுக்க நான் கற்றுக் கொள்வேன். வீட்டிலும் ஜெபிப்பேன். கடவுள் என்னையும் விசேடமான பணிக்காகத் தெரிவுசெய்வார்.

ஆண்டவரே பேசும்
உமது பணிக்காக
ஈடுபடும் என் செவிகள்
உமது தொனியைக் கேட்பதற்கு
ஆண்டவரே பேசும்.





**விண்ணப்பம்**

*அன்பின் ஆண்டவரே,*
*இறைவார்த்தையினூடாகக் கேட்கும் உமது சத்தத்திற்குக் கீழ்ப்படியவும் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படியவும் எமக்கு இரக்கம் செய்யுங்கள். உமது பணியை நிறைவேற்றுவதற்கு பெலன் தாருங்கள்.*

*ஆமென்.*



## செயற்பாடு

1. நீங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியும் இரு சந்தர்ப்பங்கள் குறிப்பிடுக.

2. சாமுவேலைப் போன்று நீர் பெற்றோருக்கு உதவி செய்யும் முறையைச் சித்திரமாக வரைக.

# 21 இளவயதில் அரசனான யோசியா

**2 அரசர்கள் 22:1-2**

இஸ்ரயேல் நாட்டில் உருவான சிறிய வீரனைப் பற்றி திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரின் பெயர் யோசியா. யோசியா அரசனின் தாயின் பெயர் எதிதா. யோசியா எட்டு வயதில் அரசனானார். சிறியவனாய் இருந்தபோதிலும் இறைதிட்டத்தை நிறைவேற்றுவதற்காக சிறுவயது முதல் கடவுளால் தெரிந்தெடுத்து நியமிக்கப்பட்டார்.



உரு 21.1 சிறிய அரசன் யோசியா

திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அவர் சிறிய வயது முதல் கடவுளுக்கு முன்பாக நேர்மையாய் நடந்து கொண்டார். தாவீது அரசனை முன்மாதிரியாகக் கொண்டு, கடவுளின் முன்பாக நன்மையான


செயல்களைச் செய்தார். கடவுள் தாவீதுக்கு அளித்த வாக்குறுதியின்படி தாவீதின் வம்சத்தை முன்னால் கொண்டு செல்வதற்கு சிறிய அரசன் யோசியாவைக் கடவுள் தெரிந்து கொண்டார்.

பத்துக் கட்டளைகளிலுள்ள சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்படிந்து வாழ்ந்த சிறிய யோசியா அரசன் அவரின் வாழ்வில் கடவுளின் சட்டத்தை ஒரு கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தார்.

இவ்வாறு யோசியா அரசன் கடவுளில் அன்பு கொண்டார். எனவே சிறிய வயது முதல் ஏதோ ஓர் விசேட பணிக்காகக் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டார் என்பது எமக்குத் தெரிகின்றது.

**சிறியவர்களாகிய நாமும் யோசியா அரசனைப் போன்று**

- கடவுளின் முன்பாக சரியானவைகளைச் செய்வோம்.
- சிறுவயது முதல் கடவுளை மட்டும் வழிபடுவோம்.
- கடவுளின் சட்டங்களையும் கட்டளை களையும் பாதுகாப்போம்.
- பயமின்றிக் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்.
- நன்நடத்தைகளை முன்மாதிரியாகக் கொள்வோம்.
- ஆலயத்தில் எமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை நல்ல முறையில் நிறை வேற்றுவோம்.
- எப்போதும் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்வோம்.



யோசியா அரசனின் வாழ்வைப் போன்று சிறுவர்களாகிய உங்கள் வாழ்விலும் நற்பண்புகளைப் பெற்றிருப்பீர்கள். அப்பண்புகளை வளர்த்துக் கொண்டு கடவுளின் முன்பாகச் சரியானவற்றைச் செய்து இறையரசின் கிரீடத்தை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.

**சிறியவர்களாகிய நாமும் இறைகட்டளைகளை நிறைவேற்றுவதற்கு செயற்படுவோம்.**



**விண்ணப்பம்**

*அன்பின் ஆண்டவரே,*
*சிறியவர்களாகிய நாமும் சரியானவற்றைச் செய்வதற்கு எமக்கு இரக்கம் செய்யுங்கள். இறை விருப்பத்திற்கு சிறிய வயது முதல் கீழ்ப்படியவும் நல்ல முன்மாதிரியான வாழ்வை வாழவும் எம்மை ஆசிர்வதியுங்கள்.*

*ஆமென்.*



## செயற்பாடு


1. யோசியா அரசரானபோது அவரின் வயது என்ன?
2. யோசியா அரசனின் தாயின் பெயர் என்ன?
3. யோசியா எங்கே ஆட்சி செய்தார்?
4. யோசியா அரசனின் நற்பண்புகள் மூன்றை எழுதுக.
5. உங்களிடம் காணப்படும் நற்பண்புகள் மூன்றை எழுதுக.

# 22 இறைவிருப்பத்திற்குக் கீழ்ப்படிந்த மரியா

**லூக்கா 1:26-31**

கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரில் மரியா என்ற அழகான இளம்பெண் ஒருவர் வசித்து வந்தார். மரியா மிகவும் நல்லவர். அவருக்கு தாவீதின் அரச பரம்பரையில் வந்த யோசேப்பு என்பவருடன் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

ஒரு நாள் கடவுள் கபிரியேல் என்னும் வானதூதரை மரியாவிடம் அனுப்பினார்.



மரியா எவ்வளவு நல்ல பெண்? எம் அனைவரின் வாழ்விலும் கடவுளின் திட்டம் இருக்கின்றது. அவ்வாறே மரியா கடவுளாகிய இயேசு பாலகனின் தாயாவதற்குத் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டார். இதன் மூலமாக இறைவிருப்பம் நிறைவேறியது.

மரியா கபிரியேல் வானதூதர் செய்தியைக் கேட்டவுடன் அவரின் மனதிலே கலக்கம் ஏற்பட்டது. அவ்வாறு இருந்த போதிலும் அவர் இறைகட்டளைக்குக் கீழ்ப்படிந்து இறைவிருப்பத்தை ஏற்றுக் கொண்டார்.

மரியா தனது வாழ்வை முற்றாக இறைவனுக்கு ஒப்புவித்தார். சந்தோச மான மனதுடன் அந்நற்செய்தியை ஏற்றுக் கொண்டு இறைவிருப்பத்திற்கு இடமளித்தார்.

மரியாவுக்கு இச்செயல் இலகுவானதல்ல. மனிதர்களின் நிந்தனைக்கும் ஏளனத்திற்கும் உட்பட்டிருப்பார். இருப்பினும் அவை அனைத்திற்கும் மேலாக தனது வாழ்வைக் கடவுளுக்கு முழுமையாக ஒப்புவித்த மரியா தனது விருப்பத்தை விட இறைவிருப்பத்தை நிறைவேற்றக்கூடிய தைரியமான பெண்ணாக இருந்தார்.

| மரியா | நான் |
|---|---|
| • இறை விருப்பத்தை அறிந்து கொண்டார். | • இறை விருப்பத்தை அறிந்து கொள்வேன். |
| • இறை விருப்பத்திற்குக் கீழ்ப் படிந்தார். | • இறை விருப்பத்திற்கு கீழ்ப் படிவேன். |
| • இறை விருப்பம் நிறைவேறு வதற்கு இடமளித்தார். | • இறை விருப்பம் நிறைவேறுவதற்கு இடமளிப்பேன். |
| • சவால்களை ஏற்றுக் கொண்டார். | • சவால்களை ஏற்றுக் கொள்வேன். |
| • இறை விருப்பத்தை நிறைவேற்று வதற்கான ஆசீர்வாதத்தைப் பெற்றார். | • இறை விருப்பத்தை நிறைவேற்று வதன் மூலம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வேன். |

### மனன வாக்கியம்

*நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட ஆண்டவராகிய என் தலைவர் காலைதோறும் என்னை எழுப்பிச் செவி கொடுக்கச் செய்கின்றார்.*

*எசாயா 50:4*

## செயற்பாடு

1. கீழே தரப்பட்டுள்ள பாடலை ஆசிரியருடன் சேர்ந்து பாடுங்கள்.

உம் சித்தம் நடப்பியும் நான் ஓர்
மட்பாண்டம் உம் கரத்தில் உம்
பாதத்தண்டை காத்திருக்கும் என்னை
உம் சித்தப்படி மாற்றும்


2. மரியாவின் நற்பண்புகளின் மூலமாக உங்கள் வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் மூன்றை எழுதுக.

3. கீழே தரப்பட்ட வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

1. கபிரியேல் வானதூதர் மரியாவுக்கு இயேசுவின் பிறப்பை அறிவித்தார். ( )
2. இந்த செய்தியைக் கேட்ட மரியா கலக்கமடைந்தாள். ( )
3. கலக்கமடைந்த மரியா இறைவிருப்பத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ( )
4. நாம் எப்போதும் இறைவிருப்பத்தை ஏற்றுக் கொள்பவராவோம். ( )
5. இறைவிருப்பத்தை அறிந்து கொள்வதற்கு ஜெபம் உதவியாக அமையும். ( )

# 23 ஆபிரகாம்

## தொடக்க நூல் 18: 22-33



அருண் மிகவும் நல்ல பிள்ளை. அவன் புகையிரதப் பாதையின் அருகில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்தான். அவனுடைய வீட்டின் முன்னால் உள்ள வீதியில் இடைவிடாமல் வாகனங்கள் கடந்து செல்லும். அவ்வீதியில் ஒரு பாதுகாப்பான புகையிரதக் கடவை இல்லாமலேயே புகையிரதப் பாதையும் அமைந்திருந்தது.

உரு 23.1 விபத்தைத் தவிர்ப்பதற்கு அருணின் முயற்சி

ஒருநாள் திடீரென அதிவேகமாக வந்த சைக்கிள் ஒன்று புகையிரதப் பாதையைக் கடக்கும்போது வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கீழே விழுந்தது. அதில் இருந்து சிறுவனும் கீழே விழுந்தான்.

''ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்'' என புகையிரதப் பாதையின் நடுவில் விழுந்துகிடந்த சிறுவன் கூக்குரல் எழுப்பினான். புகைவண்டியும் அருகில் வந்து கொண்டிருந்தது. அருணால் எதுவும் செய்ய இயலாமல் உடனடியாகத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். அருண் இதைக் கண்டு உடனடியாகச் செயற்பட்டான்.

அவனது சிவப்பு நிறச் சட்டையைக் கழற்றி அதை ஆட்டிக் கொண்டு மிகவும் சத்தமாய்க் கூப்பிட்டான். அந்த சத்தத்தைக் கேட்ட ரவி மாமா, கமலா மாமி, சிமியோன் மாமா அனைவரும் ஓடிவந்து இரத்தம் வழிந்தோடக் காணப்பட்ட சிறுவனைக் காப்பாற்றினர். அவ்வேளையில் அருண் சிவப்புச் சட்டையை ஆட்டியதைக் கண்ட புகையிரதச் சாரதி புகைவண்டியை நிறுத்த அது பாரிய சத்தத்தோடு அருகில் வந்ததும் நின்றது.

அருண் மிகவும் நல்ல பிள்ளை. அருணின் முயற்சியால் நிகழ இருந்த பெரிய விபத்திலிருந்து ஓர் உயிரைக் காப்பாற்றக்கூடிய திறமை அவனிடம் காணப்பட்டது.


இன்று எமக்கு தரப்பட்ட திருவிவிலியப் பகுதியானது தொடக்க நூல் 18:22-33 வரையிலான வசனங்கள்.

இப்பகுதியில் ஆபிரகாம் சோதோம், கொமோரா நகருக்காகக் கடவுளிடம் மன்றாடிய கதையின் செய்தியாகும். சோதோம், கொமோராவில் இருந்த மக்கள் மிகவும் தீமையானவர்கள். அவர்களின் தீமையால் அவர்களுக்கு அழிவு வரும் என்பதை அறிந்த ஆபிரகாம் கடவுளிடம் அவர்களுக்காக மன்றாடினார். எப்படியாவது இம்மக்களை மீட்டுத்தரும்படி அவர் கடவுளிடம் கேட்டார்.



உரு 23.2 ஆபிரகாம் கடவுளின் முன்னிலையில் மன்றாடுகிறார்

இந்த நிகழ்வின் மூலமாக ஆபிரகாமின் வாழ்வில் இருந்த நல்ல பண்புகளை இவ்வாறு அறிவோம்.




ஆபிரகாம் சோதோம், கொமோரா அழியப்போகும் சந்தர்ப்பத்தில் அதற்காக மன்றாடினார்.

அருண் அழியப் போகும் ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்கு முன்வந்தார். இதை முன்மாதிரியாகக் கொண்டு சிறியவர்களாகிய நாமும் பிறரின் நலனுக்காக முன் நின்று செயற்பட முடியும் என்பதை மனதிற் கொண்டு செயற்படுவோம்.



## செயற்பாடு

1. தரம் 4 இல் கல்வி கற்கும் நீங்கள் பிறருக்கு நன்மை செய்வதற்காக முன்வந்த சந்தர்ப்பங்கள் மூன்றை எழுதுங்கள்.

2. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமையுங்கள்.

i. வாழ்வோம் / நடுநிலைவகித்து / பிறருக்காக

ii. வாழ்வோம் / பிறருக்கு / நன்மைசெய்து

iii. வாழ்வது / இறைவிருப்பமாகும் / நாம் நல்லவர்களாக

# 24 பவுலும் ஒனேசிமுவும்

**பிலமோன் 1: 9-21**



இன்று 2019 / 10 / 22ஆம் திகதி. குமார் தனது தினக் குறிப்புப் புத்தகத்தில் எழுதுவதற்காக தனது பென்சிலை எடுத்து எழுதத் தொடங்கினார்.

இன்று எமது வகுப்பிற்கு புதிய மாணவன் ஒருவர் வந்தார். அவரின் பெயர் சுரேஷ். அவன் அணிந்திருந்த சட்டையின் ஒரு பக்கத்தில் தையல் பிரிந்திருந்தது. ஒருவருமே அவருடன் கதைக்கவில்லை. அவர் பெரிய துக்கத்திலே இருந்தார். எனக்கும் அவரைப் பார்ப்பதற்கு மிகவும் கவலையாய் இருந்தது.



இன்று 2019 / 10 / 23ஆம் திகதி நான் காலையிலே பாடசாலைக்குச் சென்றேன். நான் நேராகப் புதிய நண்பனைத் தேடிச் சென்றேன். நேற்று உங்களுடன் எவருமே கதைக்கவில்லை என்பதால் நீங்கள் மனம் வருந்தினீர்களா எனக் கேட்டேன். அதன் பின் நான் இயேசுவின் அன்பைப் பற்றி சொல்லிக் கொடுத்தேன்.



இன்று 2019 / 10 / 24ஆம் திகதி நான் இன்று சுரேசைத் தேடிக் கொண்டு சென்றேன். அவன் என்னை அணைத்துக் கொண்டு என்னோடு அழுதான்.

நான் சுரேசிடம் நீங்கள் தான் எனது நல்ல நண்பன் என்று கூறினேன். இவ்வேளையில் எனக்கு பவுலும் ஒனேசிமுவையும் பற்றிய கதை நினைவில் வந்தது.


பவுல் என்பவர் இயேசுவைப் பின்பற்றியவர். இயேசுவுக்காகப் பணி செய்வதனால் அவர் சிறையிலடைக்கப்பட்டார். அந்த சிறைச்சாலையில் பவுல் ஒனேசிமு என்பவரைச் சந்தித்தார். ஒனேசிமு என்பவர் ஒரு பணியாளனாக இருந்தபோதிலும் பவுல் அவர்மீது அன்பு கொண்டார்.



உரு 24.1 பவுலும் ஒனேசிமுவும் சிறையில் சந்தித்தல்

இந்த சம்பவம் எவ்வளவு அன்பு நிறைந்தது. கூறப்போனால் பவுல் தனது இதயத்தில் ஒனேசிமுவை ஏற்றுக் கொண்டிருந்தார். அவ்வாறான அன்பு நம் அனைவருக்கும் ஒரு பெரிய முன்மாதிரியாகும்.

ஒனேசிமுவைப் பற்றி பவுல் தனது தினக்குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பார்.



உரு 24.2 பவுல் சிறைச்சாலையில் தினக்குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடுதல்

**சிறைச்சாலையில் முதல் நாள்**

நான் சிறையில் இருந்தபோது ஒனேசிமு என்னும் பெயர் கொண்ட ஒரு வாலிபனைச் சந்தித்தேன். ஏதோ குற்றத்திற்காக ஒனேசிமு சிறைப்பட்டிருந்தார். இவ்வாலிபனோடு இயேசுவைப் பற்றி கதைப்பதற்கு நான் எண்ணினேன். அவன் எனது பிலமோன் என்னும் நண்பனின் வீட்டில் பணியாளனாக இருந்தது எனக்கு நினைவில் இருக்கின்றது.

**சிறைச்சாலையில் இரண்டாம் நாள்**

நான் ஒனேசிமுவுக்கு இயேசுவின் அன்பைப் பற்றி சொல்லிக் கொடுத்தேன். அவரும் இயேசுவை அன்பு செய்து, தன் வாழ்வை அவருக்கு ஒப்புக் கொடுக்க விரும்பினார். பவுலாகிய நானும் அவரை அன்பு செய்தேன்.

அவருக்காக ஏதாகிலும் செய்ய வேண்டுமென எண்ணினேன். அவர் இருந்த வீட்டுக்கே அவரை அனுப்புவது அவசியம் என உணர்ந்தேன். இதைக் குறித்து அவரின் தலைவரான எனது நண்பன் பிலமோனிடம் கதைப்பதற்காக அவருக்குக் கடிதம் எழுத வேண்டுமென எனக்குத் தோன்றியது.

## சிறைச்சாலையில் மூன்றாம் நாள்

நான் பிலமோனுக்கு இவ்வாறு எழுதி அனுப்பினேன். ''ஒனேசிமுவை எனது அன்பான பிள்ளையாக ஏற்றுக் கொண்டேன். இதனால் அவனை மன்னித்து அடிமையாக அல்ல சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்''.

நான் எனது நண்பன் பிலமோன் ஒனேசிமுவை எனக்காகச் சகோத ரனாக ஏற்றுக் கொள்வார் என்பதை நம்புகின்றேன். ஏனெனில், இயேசு வின் அன்பை பிலமோன் அறிந்தி ருந்தார் என்பதை நான் அறிவேன்.

அன்பான மகனே, மகளே இந்தச் சம்பவமானது மிகவும் அன்பு நிறைந்த சம்பவமாகும். நாமும் சாதி, மதம், குலம் போன்ற வேற்றுமைகளை மறந்து அனைவரையும் ஒன்றாக ஏற்றுக்கொண்டு செயற்பட முடியுமானால் நீங்களும் பெறுமதியான பிள்ளைகளாவீர்கள்.



உரு 24.3 ஒன்றிணைந்து இருக்கும் சிறுவர்கள்

சிறியவர்களாகிய உங்களுக்கும் பவுலின் வாழ்விலிருந்து பெரிய முன்மாதிரியை பெற்றுக்கொள்ள முடியுமென நம்புகின்றேன்.



### விண்ணப்பம்

***அன்பின் இறைவா, நீர் மிகவும் நல்லவர். அனைவரையும் ஒன்றாகவே நேசிக்கின்றீர். நாமும் பவுலைப் போன்று அனைவரையும் ஒன்றாக நேசிக்கக் கற்றுத்தந்த படியினால் உமக்கு நன்றி. நாம் நம்மை நேசிப்பது போன்று அனைவரையும் ஒன்றாக ஏற்றுக்கொண்டு அன்பு செய்யச் சிறியவன் நான் இன்று பொருத்தனை செய்கிறேன்.***

***ஆமென்.***



### செயற்பாடு

1. சரியான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புவோம்.

(அடிமையாக / பிலமோன் / சகோதரனாக / சிறைச்சாலையில்/ ஒனேசிமு)

பவுல் .................. இருக்கும்போது .................. என்னும் வாலிபனை சந்தித்தார். அவனை .................. அல்ல .................. ஏற்றுக் கொள்ளும்படி தன் நண்பனான .................. என்பவருக்கு கடிதம் அனுப்பினார்.

2. கீழே தரப்பட்ட தாளலயப் பாடலை பாடுங்கள்.

**பவுல் ஒனேசிமுவை**
**சந்தித்தார் சிறையினிலே**
**ஒனேசிமுவுக்கு கிடைத்தது**
**இறைவார்த்தை சிறையினிலே**

**தன் இதயத்திற்கேற்ற ஒனேசிமுவை**
**அடிமை என்பதை மறந்து**
**சகோதரத்துவத்துடன் நடாத்துவதற்கு**
**வேண்டினாரே பிலமோனிடம்**

# 25 எஸ்தர்

**எஸ்தர் 4 : 13 - 16**

திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்ட எஸ்தர் மிகவும் துணிவான ஒரு பெண்ணாவாள். அவள் யூத வரலாற்றுக் கதைகளிலே மிகவும் முக்கியமான பெண்ணாகக் காணப்படுகின்றார். யூதப் பெண்ணான எஸ்தர் அகஸ்வேரின் மனைவியாவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அது உண்மையாகவே கடவுளின் பெரிய திட்டத்தின் பிரதிபலன் என்பதை எம்மால் அறிந்து கொள்ள முடியும். அவள் அச்சமின்றி செயற்பட்டதனால் யூத வரலாற்றிலே வீரப் பெண்ணாக அறிமுகமானார்.



உரு 25.1 அகஸ்வேர் மன்னர்



உரு 25.2 எஸ்தர் அரசி



உரு 25.3 மொர்தக்காய்



உரு 25.4 ஆமான்



உரு 25.5 அகஸ்வேர் மன்னர் முன் எஸ்தர்

ஆமான் மூலமாக அகஸ்வேர் மன்னர் தவறாக வழிநடத்தப்பட்டார். யூத மக்களை அழிப்பதற்காக மன்னரின் ஆணையைப் பெற்று முத்திரையிட்டு அனுப்பினார். இதற்குக் காரணம் யூதனான மொர்தக்காய் ஆமானை மண்டியிட்டு வணங்கவில்லை என்பதால் ஏற்பட்ட பகையேயாகும்.

அப்போது மொர்தக்காய் மன்னரின் மனதை மாற்றுவதற்கு முன்வந்து எஸ்தருக்கு அறிவித்து செய்தி அனுப்பினார்.

எஸ்தருக்கு,

''நீர் மட்டும் அரசமாளிகையில் காப்பாற்றப்படுவாய் என எண்ண வேண்டாம். உன் தந்தையின் யூத வம்சமானது அழிந்து போகும். நீ மன்னரிடம் சென்று உன் மக்களுக்காக மன்னரிடம் வேண்டி இதிலிருந்து விடுதலையை பெற்றுக்கொடு''

இப்படிக்கு,

மொர்தக்காய்

மொர்தக்காயுவுக்கு,

''நீர் போய் சூசானில் இருக்கும் அனைத்து யூதமக்களையும் ஒன்று கூட்டி எனக்காக நோன்பிருந்து மூன்றுநாள் கடவுளிடம் மன்றாடுங்கள். மன்னரின் அனுமதியின்றி அவரின் முன்னால் செல்வது சட்டத்திற்கு விரோதமான செயலாகும். இருப்பினும் நான் மன்னரிடம் செல்வேன் என்னைக் கொன்றாலும் கொல்லட்டும்.

இப்படிக்கு

எஸ்தர்.

யூத இனத்தைச் சேர்ந்த எஸ்தர் அரசி மன்னரின் முன்னால் செல்வதற்கு துணிவடைந்தார். எஸ்தரின் பயமில்லாத இத்தீர்மானம் இலகுவானதல்ல. ஆனால் எஸ்தர் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முன்னால் இறைவனை வேண்டி அவரின் வழிகாட்டலை நாடிய ஒருவர் என்பது தெளிவாகின்றது. எனவே மிகவும் நம்பிக்கையோடு சூசானில் உள்ள மக்களை நோன்பிருந்து தனக்காக மன்றாடும்படி கூறினார். மொர்தக்காய் உடன் சூசானில் உள்ள அனைத்து யூதரும் எஸ்தருக்காக முன் வந்து மன்றாடினர். அந்த மன்றாட்டு மிகவும் சிறப்பானது. ஏனெனில் மூன்று நாட்கள் இரவும் பகலும் நோன்பிருந்து ஒருமித்து ஒரே சிந்தையோடு மன்றாடினர்.



உரு 25.6 மொர்தக்காயுடன் சூசானில் உள்ள யூத மக்களின் மன்றாடல்

**மனன வாக்கியம்**

***ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு, யாருக்கு நான் அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம் யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்.***

**திருப்பாடல் 27:1**

## செயற்பாடு

1. எஸ்தரின் கதையில் காணக்கூடிய நல்ல குணாதிசயங்களை தெரிவுசெய்து தொடர்புபடுத்துக.

**எஸ்தர்**

- துணிவுடன் செயற்படல்.
- மன்றாட்டில் பிறரை ஈடுபடுத்தல்.
- தேவையான இடத்தில் முன்வந்து செயற்படுதல்.
- ஒழிந்திருக்க முயற்சித்தல்.
- குற்றம் சாட்டுதல்.
- தனது மக்களுக்கு உதவி செய்தல்.
- வீராங்கனையாகச் செயற்படுதல்.
- செபவாழ்வு வாழ்தல்.